# வருடாந்த அறிக்கை

# 2012

## விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்
### பேராதனைப் பல்கலைக்கழகம்

த. பெ. இல. 55, பழைய கலகா வீதி
பேராதனை, இலங்கை

தேலைபேசி : 081-2389205, 2386542, 2385517, 2388692, 2388203
தொலைநகல் : 081-2388318
இணையம் : www.pgia.ac.lk

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தூர நோக்கு | 1 |
| 2. | குறிக்கோள் | 1 |
| 3. | பணிப்பாளரின் கூற்று / மீளாய்வு | 2 |
| | I. அறிமுகம் | 2 |
| | II அடைவுகள் | 4 |
| | III தவறுகளும் நியாயங்களும் | 7 |
| | IV எதிர்கால திட்டங்கள் | 7 |
| 4. | வளங்களும் மாணவர்களும் | 8 |
| 5. | உள்நாட்டு மாணவர்கள் | 8 |
| 6. | வெளிநாட்டு மாணவர்கள | 9 |
| 7. | கல்வி அலுவலர்கள் | 9 |
| 8. | கல்வி சாரா அலுவலர்கள் | 10 |
| 9. | ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் வெளியீடுகள் | 11 |
| 10. | கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்ச்சிப்பட்டறைகள் | 11 |
| 11. | ஆராய்ச்சி விருதுகள் | 12 |
| 12. | புதிய கற்கைகள் | 13 |
| 13. | விவசாய நூலக அறிக்கை | 13 |
| 14. | ஆராய்ச்சிப் பட்டங்களின் நிறைவு | 15 |
| 15. | மீளெழும் செலவுகள் | 19 |
| 16. | மூலதன செலவுகள் | 19 |
| 17. | கருத்திட்டங்கள் (உள்நாடு,வெளிநாட்டு நிதிகள்) | 19 |
| 18. | கருத்திட்ட செலவுகள் (உள்நாடு,வெளிநாட்டு நிதிகள்) | 20 |
| 19. | நிதி முன்னேற்றம் (செலவுகள்) | 20 |
| 20. | நிதி முன்னேற்றம் (உருவாக்கிய வருமானம்) | 20 |
| 21. | நிதி விளைவு பகுப்பாய்வு - 2012 | 21 |
| 22. | கிடைக்கப்பெற்ற அடிப்படை வசதிகள் - 2012 | 21 |
| 23. | ஏனைய விடயங்கள் / இவ்வறிக்கையுடன் தொடர்புடைய விளைவுகள் | 21 |
| 24. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்கள் | 22 |
| 25. | கற்கை சபைகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் | 22 |

# 2012 இற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

## விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்
## பேராதனைப் பல்கலைக்கழகம்

### 1. தூர நோக்கு

விவசாயம் மற்றும் அதனோடிணைந்த துறைகளில் பட்டப் பின்படிப்புக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் அதன் எல்லைகளில் ஊடாக அரசாங்கத்தினதும், தொழில் துறையினதும், உலகளாவிய சமூகத்தினதும் தேவைகளுக்கான சேவையின வழங்குகின்ற ஒரு சிறந்த நிலையமாக இருத்தல்

### 2. குறிக்கோள்

விவசாயம் மற்றும் அதனோடிணைந்த துறைகளில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய சிறந்த பாட அறிவு மற்றும் பயிற்சி உடையடையவர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், அர்பணிப்புடையவர்கள் ஆகியவர்களை உருவாக்குவதன் மூலம் பட்டப்பின் கல்வி, ஆராய்ச்சி, மற்றும் எல்லைகளில் ஒரு சிறந்த தேசிய மற்றும் பிராந்திய நிலையமாக திகழ்தல்

## 3) பணிப்பாளரின் கூற்று / மீளாய்வு

### I) அறிமுகம்

1979 ம் ஆண்டின் 9 ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் வி. ப. பி. நிலையம் ஒரு முகாமைத்துவ சபையின் வழிகாட்டலின் கீழ் பேராதனைப் பல்கலைக்கழகத்தினுள் ஒரு நிறுவகமாக தொழிற்படுவதற்கு 1975 ம் ஆண்டு இந்நாட்டின் முதலாவது பட்டப் பின்படிப்பு கல்வி நிறுவகமாக இந்த விவசாயப் பட்டப் பின்படிப்பு நிலையம் (வி. ப. பி. நி) ஸ்தாபிக்கப்பட்டது. இந்நாட்டில் துரிதமாக விருத்தி அடைந்து வரும் விவசாயத் துறைக்கு பொருத்தமான பயிற்ச்சி பெற்ற விஞ்ஞான ஆளனியினை வழங்குவதும் பட்டப் பின்படிப்புக் கல்விக்கான நாட்டின் இயலுமையினை அபிவிருத்தி செய்வதும் என்ற பிரதான நோக்கத்திற்காக வி.ப.பி.நி. உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு கால் தசாப்தங்களுக்கும் மேலாக தேசிய தேவைகளுக்காக இது சேவையாற்றி வருகின்றதுடன் பட்டப் பின்படிப்புக் கல்வியில் ஒரு தலை சிறந்த நிலையமாக இந்த நாட்டிலும் பிராந்தியத்திலும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது

இலங்கையின் விவசாய அபிவிருத்திக்காக தேவைப்படுகின்ற மனித வளங்கள் அதேபோல் ஆராய்ச்சி வெளியீடுகள் ஆகியவற்றில் கடந்த 37 வருட காலத்திற்கும் மேலாக விவ.ப.பி.நி தனது கல்வி, ஆராய்ச்சி மற்றும் வெளிவாரி நிகழ்சித்திட்ட செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றது.

பாடவிதானத்தில் தொடர்ச்சியான மீட்டல் மற்றும் முன்னேற்றுதல், பட்ட நிகழ்சி திட்டங்களை விரிவாக்குகல், பன்முகப்படுத்தல், மேலும் ஏனைய கல்வி நிறுவகங்கள், விவசாய சமுகம், மற்றும் பங்காளிகள் ஆகியவற்றுடன் தொடர்புகளை அபிவிருத்தி செய்தல் ஊடாக இதனை அடைந்து இருக்கின்றது. விவசாயத்தில் பட்டப்பின்படிப்புக்கான இந்தக் கேள்வி ஒவ்வொர வருடமும் அதிகரிப்பைக் காட்டுகின்றது மேலும் இந்த விவ.ப.பி.நி. இந்த தொடர்ச்சியான கேள்வி அதிகரிப்பை எதிர் கொள்வதற்கு தொடர்ச்சியாக தன்னைத்தானே தயாராக்கியுள்ளது.

கடந்த 37 வருட காலத்தில் இந்நிறுவகத்தில் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை காட்டுகின்றது. 2011/12 இல் பல்வேறு கற்கை நிகழ்ச்சித்திட்டங்களில் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மொத்தமாக 411 ஆக இருந்தது. 2012 ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக 2012 க்கு மன்னதாக புதிய அனுமதிகளை நிறைவு செய்ய முடியாமையினால் குறைவடைந்தது. தத்.முது மற்றும் கலாநிதி பட்டங்களுக்காக 35 மாணவர்கள் மாத்திரமே பதிவு செய்திருந்தனர்.

2012 ம் ஆண்டு காலப்பகுதியில் 315 மாணவர்கள் தமது பட்டங்களையும் டிப்ளோமாக்களையும் நிறைவு செய்திருந்தனர். அவற்றுள் 216 விஞ்.முது, 40 விநிமு, 22 தத்.முது, மற்றும் 10 கலாநிதிபட்டங்களும் 27 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களும் கூட வழங்கப்பட்டன.

வி.ப.பி.நி. இன் மாணவர் பரம்பல் விலங்கு மருத்துவம், விஞ்ஞானம், கலை, மருத்துவம் போன்ற பல்வேறு பீடங்களின் பட்டதாரிகளையும் மேலும் வெளிநாட்டு மாணவர்களும் உள்ளடங்கியுள்ளது. பங்காளதேசம், இந்தியா, சீன சோசலிச குடியரசு, நேபாள், மியன்மார், ஓமான், கானா ஆகிய நாடுகளில் இருந்து வந்த மாணவர்கள் விவ.ப.பி.நி இல் ஏற்கனவே அவர்களின் பட்டப்பின்படிப்புகளை நிறைவு செய்துள்ளனர்.

இந்த ஆசிரியர் குழாம் பரந்த அளவிலான கற்பித்தல் மற்றும் ஆராய்சி அனுபவத்தினைக் கொண்ட 300 க்கும் அதிகமான கல்வியாளர்களைக் கொண்டுள்ளது, பெரும்பாலானவர்கள விவசாய பீடத்திலிருந்தும் ஏனையவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ஏனைய பீடங்களில் இருந்தும், ஏனைய பல்கலைக்கழகங்கள், அரசாங்க திணைக்களங்கள், ஆராய்சி நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், ஆகியவற்றைந் சார்ந்த போதனாசரியர்களையும் இந் நிலையம் உள்வாங்கிக் கொள்கின்றது.

விவ.ப.பி.நி. இன் எதிர்கால அபிவிருத்தியின் பிரதான சொற்பதமாக ‘தரம்’ இருக்கும். இது செயல்முறை அனுபவம், புதிய அறிவுகள், முகாமை செய்யும் அனுபவத்துடன் எமது உயர்ந்த உயிர்பண்முகத்தன்மை பயன்படுத்தி மரபுரீதியான விவசாய தொழில்நுட்பத்துடன் முற்போக்கான தொழில்நுட்பத்தை தேடிப் பெறுவதற்கு மேலும் அதனால் எமது தேச மக்களுக்கு சகல வகையிலும் நன்மை பயிலக்கூடியதாக இருத்தல் போன்றவற்றிற்கு முயற்சித்தல். இதற்கும் மேலாக விவ.ப.பி.நி இன் இந்த ‘தரம்’ என்ற நோக்கத்தை அடைவதற்காக பாடவிதானத்தில் தொடர்ச்சியான மீட்டல் மற்றும் முன்னேற்றுதல், வெளிநாட்டு உள்நாட்டு மற்றும் பிராந்திய தொழிற்துறையுடனும் நிறுவகங்களுடனும் தற்போதுள்ள தொடர்பினை ஊறுதி செய்வதுடன் புதிய வேலைசெய்தல் பங்குடமையினை உருவாக்குதல். புதிய பாடவிதானத்தின் ஒரு பகுதியாக தொழிற்துறைப் பயிற்ச்சி வரவிருக்கின்றது. இந்த கற்கை நெறி மிகவும் அதிகமாக இயற்கையுடன் ஈடுபடுதல், பிரச்சினைகளை தீர்த்தல், ஏற்படுத்துவதாக இருக்கும் மெலும் தேசிய அபிவிருத்திக்கும் தொழிற் துறைக்கும் பயனுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதற்கும் இது வர இருக்கின்றது.

விவ.ப.பி.நி எதிர்கொள்கின்ற பிரதான சவாலாக தொடர்புடைய துறைகளில் பரந்த சாத்தியாமானதைப் பெறக்கூடிய மற்றும் துறையின் அபிவிருத்திக்கு அர்பணித்து கடினமாக வேலை செய்யக்கூடிய மாணவர்களை அவர்களின் ஆராய்ச்சி மற்றும் படிப்புகளுக்காக உருவாக்குதல். இந்த அர்பணிப்பு மூலம் நிறுவகத்தின் இந்தப் பட்டதாரிகள் ஒரு வலிமையான பணி அற நெறி அபிவிருத்திக்கு தங்களின் குணாம்சத்தில் ஒருங்கிணைந்த பாத்திரமாக உருவாகுவதை எதிர்பார்கப்படுகின்றது.

அர்பணிப்புள்ள கடுமையாக வேலை செய்யக் கூடிய பீடம் மற்றும் மாணவர்கள், நிறுவகம், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியவற்றில் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஒழுக்கவியல் கோவை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட இருக்கின்றது. விரிவுரை நேரசூசி, தேர்வுத் திகதி மற்றும் தேர்வு முடிவுகளை துரிதமாக வெளியிடல், ஆகியவற்றை கடுமையாக கடைப்பிடித்தல் 21 ம் நூற்றாண்டில் விவ.ப.பி.நி இன் பிரதான நோக்கமாக இருக்கும். ஒரு அர்பணிப்புள்ள கடுமையாக வேலை செய்யக் கூடிய பீடம் மற்றும் மாணவர்களை அபிவிருத்தி செய்தல் விவ.ப.பி.நி இன் முதன்மை நோக்கமாக இருக்கின்றது.

## II) அடைவுகள்

### i) மானியங்கள்

a) 'தகவமைப்பு பயிர் ஊடாக உயர்நில பயிரிடல் முறைமையில் காலநிலை எதிர்தெறித்தல், மற்றும் மண் முகாமைத்துவம் மற்றும் பொருத்தமான ஒருங்கிணைந்த பூச்சி முகாமைத்துவம்' என்ற ஆராய்ச்சி கருத்திட்ட தலைப்பிற்காக 4 கலாநிதி மற்றும் 4 தத். முது. மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக விவ. ப. பி. நி. HETC கருத்திட்டத்தின் தரம் மற்றும் புத்தாக்க மானியம் (QIG) ஜன்னல் 3, இனை பெற்றுள்ளது.

b) CIC இற்கு தொடர்புடைய ஒரு ஆராய்ச்சி கருத்திட்டத்தில் நிறுவகத்தினது ஒரு ஆராய்ச்சி மாணவருக்கு முழுமையாக நிதியளிப்பதற்கு CIC பொருந்திக் கொண்டது.

c) தத். முது ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான நிதியுதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு IDRC யுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

d) அரிசி இனப்பெருக்கம், கலப்பின உற்பத்தி, அழகான காலநிலை ஆகிய துறைகளில் விவ. ப. பி. நி இன் மாணவர்களுக்காக புலமைப்பரிசில் வழங்குவதற்கு விவசாய அமைச்சும் கூட ஒப்புக் கொண்டுள்ளது.

### ii) பு. உ. ஓ. / ஒப்பந்தங்கள்

பட்டப்படிப்பு ஆராய்ச்சி மெல்போன் பாடசாலை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து கலாநிதி பட்டம் வழங்குவதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. இந்தப்பட்டம் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

### iii) வசதிகள்

ஆராய்ச்சி மாணவர்களின் கள செல்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு விவ. ப. பி. நி இற்கு ஒரு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. .

அனுமதி வேலைகள், மாணவ தகவல்கள், நிருவாகவேலைகள் உட்பட விவ. ப. பி. நி இன் சகல வேலைகளினதும் தன்னியக்கத்திற்கான ஆரம்ப வேலைகள் எடுக்கப்பட்டுள்ளன. 85% வேலைகள் 2012 ம் ஆண்டு இறுதியில் நிறைவடைந்து இருந்தன. விவ. ப. பி. நி இணையத்தள செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்களிடமிருந்து ஒரு பின்னூட்டியினை பெறுவதற்கு ஒர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலகுவாக தொடர்பு கொள்வதற்கு சகல மாணவர்கள், கற்பித்தல் குழாம் ஆகியவர்களின் ஈமயில்களின் தொகுப்பு நிறைவடைந்தது. வகுப்பறை வசதிகளை விருத்தி செய்வதற்கு நிறுவகத்தின் சகல வகுப்பறைகளிலும் பல்லூடகம் பொருத்தப்பட்டது.

சகல நிகழ்சித்திட்டங்களுக்கான கட்டண கட்டமைப்புகள் நிறுவகம் மாற்றியது. கட்டணங்களை ஒரேதடவையில் செலுத்தாது தவணை முறையில் செலுத்துவதற்கான ஒரு சிறந்த செலுத்தல் முறைமையினை மாணவர்களுக்கு விரிவுபடுத்தியது.

## iv) ஆய்வரங்கு / பயிற்சிப்பட்டறை

2012 மே மாத காலப்பகுதியில் நிறுவனத்தில் வெற்றிகரமாக இடம்பெற்ற பயிற்சிப்பட்டறைகளும் கருத்தரங்குகளும் பின்வருமாறு இருந்தன.

1) ஜப்பான், சய்தாமா பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் தொழில்நுட்ப தேசிய பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கெப்நெட் கருத்திட்டத்தினால் நகர குளங்கள் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்தில் சர்வதேச ஆய்வரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

2) நேபாள அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக 7 நேபாள அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளுக்கான சர்வதேச பயிற்ச்சி நிகழ்சித்திட்டம் நடாத்தப்பட்டது. .

3) சர்வதேச தாவர போசாக்கு நிறுவனத்துடன் (IPNI) இணைந்து இலங்கையில் மண் போசாக்கு முகாமைத்துவத்தின் தற்கால போக்கு என்ற தலைப்பில் ஒரு பயிற்சிப்பட்டறை டிசம்பரில் நடைபெற்றது. .

## v) வருடாந்த காங்கிரஸ் 2012

இந்த வருடாந்த காங்கிரஸ் சகல உள்நாட்டு மற்றும் சில பிராந்திய பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியதாக மிகச் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டு நிறுவகத்தினால் ஒழுங்கு செய்திருக்கின்றது. உள்நாடு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு மாணவர்கள் அதேபோல் சார்க் பிராந்தியத்திலுள்ளவர்கள் அவர்களது ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை இந்த காங்கிரசில் முன்வைக்கின்றனர். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இது அறிவியல் உள்ளடக்கம் மற்றும் அமைப்பு என்பவற்றில் ஒரு விதிவிலக்கான உயர்ந்த நிலை மற்றும் தரத்தினை அடைந்துள்ளது. இந்த முன்வைத்தல்கள் பட்டப்பின்படிப்பு மாணவர்களிடையே ஒரு அதிநவீன ஆராய்ச்சி கலாசாரத்தினை உருவாக்கி ஒரு தீவிர விவாதங்களுக்கு உட்படடதாக இருக்கின்றது.

இந்த 24வது வருடாந்த காங்கிரஸ் நவம்பர் 15-16 களில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற 8 தொழில்நுட்ப அமர்வுகளைக் கொண்ட காங்கிரசில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அன்னளவாக 550 பேர்கள் பங்குபற்றினர். பிரதம அதிதியாக சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகத்தின் DG திரு ஜெரமி பேர்ட், அவர்கள் கலந்து கொண்டார். கிடைக்கப்பெற்ற 58 ஆய்வுக்கட்டுரைகளில் முன்வைப்பதற்காக 30 ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் 15 ஆய்வுகக்கட்டுரைகள் சுவரொட்டி முன்வைத்தல்களுக்காக தெரிவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளர்களாக நெதர்லாந்தில் இருந்து கலாநிதி ஹென்ஸ் செயர், வ.ப. பொன்டெரா பிரேன்ட லங்காவில் இருந்து கலாநிதி S.T.C மகவிதானகே, மற்றும் அவுஸ்திரேலிய குனிஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் விவசாயம் மற்றும் உணவு விஞ்ஞான பாடசாலையில் இருந்து கலாநிதி மாக்ரட் ஈ ஜோன்ஸ்டன் ஆகியோரும் கூட இந்த நிகழ்வில் வரவழைக்கப்பட்ட பேச்சாளர்களாக தமது பேச்சுக்களை நிகழ்த்தினர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (பமாஆ), CIC விவசாய வியாபாரம், வ.ப. பொன்டெரா பிரேன்ட லங்கா, வ.ப. லங்கெம் சிலோன் PLC, IPMP மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பே.ப. ஆகியன திரட்டப்பட்ட நிதிகளில் இருந்து பெறப்பட்ட நிதிகளுக்கு மேலதிகமாக இந்நிகழவுக்கு

நிதியுதவி அளித்தனர். விவ.ப.பி.நி பழைய மாணவரும், சுற்றாடல் அமைச்சின் செயலாளருமான திரு BMUD பஸ்நாயக நிறைவு நாள் உரையினை நிகழ்த்தினார்.

2011 காங்கிரசில் விருது வென்றோர்களின் விபரம் பின்வருமாறு;

**முழுவதிலும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை** - திருமதி E. சுபாலினி

**அமர்வுகளில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை** **விருது வென்றோர்**

i. மிருக உற்பத்தி மற்றும் சுகாதாரம் - திருமதி E. சுபாலினி
ii. மண் மற்றும் நீர் முகாமைத்துவம் - கலாநிதி. W.S. தந்தெனிய
iii. தாவர பாதுகாப்பு மற்றும் பயிராக்கல் - திரு. U.G.A.I. சிரிசேன
iv. உணவும் போசாக்கும் - Ms. W.P.K.M. அபேசேகர
v. பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் - திரு..K. ஹேரத்
vi. விரிவாக்கம் மற்றும் தொடர்பாடல் - திரு. N. சங்கரையா
vii. பயிர் தன்மையாக்கல் மற்றும் பண்முகத்தன்மை- திரு.. K.K. லியனகே
viii. சுவரொட்டி முன்வைத்தல் - திருமதி W.M.G.D. விஜேசுந்தர

**கலாநிதி AWR ஜோகிம் ஞாபகார்த்த விருது**

நிறுவகத்தின் மிகச்சிறந்த மாணவனுக்கான விருதாக வழங்கப்படும் கலாநிதி AWR ஜோகிம் ஞாபகார்த்த விருது 2011, பயிர் விஞ்ஞான கற்கை சபையின் விஞ்ஞான முதுமானி மாணவன் திரு GAP கல்கமுவ இற்கு வழங்கப்பட்டது.

**சர்வதேச தாவர போசாக்கு நிறுவகத்தினால் (IPNI) 2012 ம் ஆண்டுக்கான புலமை விருது.**

சர்வதேச தாவர போசாக்கு நிறுவகத்தினால் (IPNI) 2012 ம் ஆண்டுக்கான மாணவர் புலமை விருது செல்வி ஆர்த்தி மரியசெல்வம் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றார். செல்வி ஆர்த்தி மரியசெல்வம் இற்கு இந்த விருதினை வழங்குவதற்காக IPNI இல் இருந்து ஒரு குழு இலங்கைக்கும் நிறுவகத்திற்கும் 2012 டிசம்பர் 03 இல் வருகை தந்ததுடன் இலங்கையில் மண் போசாக்கு முகாமைத்துவத்தின் தற்கால போக்கு என்ற பயிற்சிப்பட்டறையிலும் கலந்து கொண்டது.

**vi) பதவியணி**

முன்னாள் சி.உ.நி. மற்றும் உ.ப. களின் மாறுதல், பதவியுயர்வு காரணமாக உருவாகியிருந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக நிறுவகத்திற்கு புதிய சிரேஸ்ட உதவி நிதியாளர் (சிஉநி) மற்றும் உதவிப் பதிவாளர் (உப) ஆகியோரை பமாஆ நியமனம் செய்து இருந்தது. நிறுவகத்தின பரிந்துரையுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த முழுநேர அடிப்படையில் ஒரு ஒருங்கிணைப்பாளரை பல்கலைக்கழகம் நியமித்திருந்தது. இவற்றிற்கும் மேலாக நீடசி பெறக்கூடிய வகையில் 6 மாதத்திற்கு ஒரு சாரதியினையும் நியமித்தது.

### vii) மூலதன வேலை

புதுப்பித்தல், நிர்மானித்தல் கருத்திட்டங்களுக்காக ரூபா 500,000.00 இற்கு மேலான மூலதன செலவுகளுக்காக விவபபிநி இன் உருவாக்கிய நிதியினை பயன்படுத்துவதற்கு திறைசேரி அனுமதியினை வழங்கி இருந்தது. இது விபபிநி விருந்தினர் வீடு, பழைய விவபபிநி கட்டிடத்தினை புதுப்பித்தல், வகுப்பறைகளுக்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், புதிய வகுப்பறைக் கட்டிடத்திற்கான வர்ணம் பூசுதல், ஆகிய வேலைகள் 2012 இல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கிணங்க நிர்மான வேலைகக்கான தொழில் நுட்ப ஆவணங்களின் தேவைகள் மற்றும் தேவையான திட்டங்களை வரைதல் ஆகியவற்றிற்கும் ஆலோசனை வழங்குதல் சேவைகுளக்காகவும் கட்டிடத்துறையின் சேவைகள் பெறப்பட்டு இருந்தன.

## III. தவறுகளும் நியாயங்களும்

இவ்வருடத்தின் முதற்பகுதியில் கல்வி சாரா அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக விவபபிநி இன் வேலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. விவசாய பீடத்தின் கல்வியாளர்கள் 100 நாட்களாக தொடர்ந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் காலப்பகுதியியல் விவபபிநி இன் புதிய நிகழ்சித்திட்டங்கள் விளம்பரம் செய்யப்பட்டன. 900 க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் கற்கை சபைகள் இயங்காமையினால் செயற்பாடுகள் தாமதமடைந்தன. வழமையாக கல்வி ஆண்டின் முதலாம் பருவம் செப்டம்பர் மாதத்தில் நிறுவகத்தில் ஆரம்பமாகும் ஆனால் கல்வியாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக சகல அனுமதி வேலைகளும் தாமதமடைந்தன. எனவே 2012 ம் ஆண்டிற்கான விவபபிநி இன் புதிய அனுமதிகள் 35 மாணவர்களாக இருந்தது.

கல்வியாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பெரும்பாலான அட்டவணைப்படுத்தப்பட்ட முழுமையான பரீட்சைகள் நடைபெறாமையினால் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பட்டதாரிகளின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருந்தது..

## IV. எதிர்கால திட்டங்கள்

நீண்ட காலமாக உணரப்பட்டு வருகின்ற தேசிய முக்கியத்துவமிக்க பிரச்சினையினை தீர்ப்பதற்கான நோக்கத்துடன் இதன் ஆராய்ச்சி செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு நிறுவகம் திட்டமிடட்டுள்ளது. ஆகவே இந்நிறுவகம் 3 கலாநிதி மற்றும் 2 தத்.முது ஆகிய மாணவர்களிற்கு விவபபிநி இன் ஆராய்ச்சி வசதியளித்தல் நிதியின் கீழ் ஆராய்ச்சி வசதிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இது நாட்டின் தேசிய முக்கியத்துவமிக்க விடயங்களை அடையாளப்படுத்துவதற்காக 2010 இல் தாபிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டங்களில் அயலாக்கம் செய்வதற்கு விவபபிநி மற்றும் யசுஆ தொழில்நுட்ப நிறுவகத்துடன் பிரிந்த பட்டப்படிப்பு நிகழ்சித்திட்டங்களுக்காக பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் நிறுவகம் ஆகியவற்றில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இவ்விடயம் தொடர்பான புஉஓ ஒன்று கானா பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் அகியோருக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ளது. ஆராய்ச்சி மாணவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக பல்வேறு அமைச்சுகள், நிறுவகங்கள், அமைப்புகள் ஆகியவற்றிடம் நிறுவகம் வேண்டியுள்ளது. மேலும் இந் வேண்டுகோளிற்கு பல அமைச்சுகள், திணைக்களங்களிடமிருந்து சாத்தியமான பதில்கள் கிடைத்துள்ளன.

## 4. வளங்களும் மாணவர்களும்:

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2012 இல் உள்ளீர்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். கல்வி, கல்விசாரா அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் விளைவாக 2012 ம் ஆண்டு காலப்பகுதியில் விவபபிநி இன் கல்வீ வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டது. எனவே புதிய மாணவர்களின் அனுமதிகள் 2013 இல் தொடங்கும்.

ஆராய்சிப் பட்டங்களுக்காக வருடத்தின் எந்த நேரத்திலும் நிறுவனத்தில் மாணவர்கள் பதிவு செய்யலாம்.

**அட்டவணை 1. வளங்கள் & மாணவர்கள்**

| நிறுவகம் | கற்கை | மொத்த மாணவர்கள் (2012) | மொத்த கல்வி அலுவலர் | மொத்த கல்வி சாரா அலுவலர் |
|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம் | ப. பி. டிப்ளோமா | 10 | 02 நிரந்தர அலுவலர், மற்றும் 300 வருகை அலுவலர் | 38 |
| | விஞ். முது | 03 | | |
| | வி. நி. முது | 03 | | |
| | தத். முது | 03 | | |
| | தத். கலாநிதி | 14 | | |
| | தற்காலிக | 02 | | |
| மொத்தம் | | **35** | | 38 |

## 5. உள்நாட்டு மாணவர்கள் :

2012 இல் 27 பட்டபின்படிப்பு டிப்ளோமாக்கள் வழங்கப்பட்டன. மேலும் அவை நேரடியாக பபி. டிப்ளோமவுக்காக பதிவு செய்த மாணவர்களையும் விரிவான பரீட்சையில் சித்தியடையாதவர்களையும் பபி டிப்ளோமா வழங்குவதற்கு தெரிவு செய்தவர்களையும் இது உள்ளடக்கியிருக்கின்றது. 2012 இல் 35 மாணவர்கள் இதன் பட்ட நிகழ்சித்திட்டங்களுக்காக நிறுவகம் அனுமதித்திருந்தது. கடந்த வருடங்களில் வெவ்வேறு பட்ட நிகழ்சித்திட்டங்களுக்காக பதிவு செய்திருந்தவர்கள் 315 மாணவர்கள் 2012 இல் பட்டம் பெற்றனர்.

**அட்டவணை 2. உள்நாட்டு மாணவர்களின் விபரமங்கள்**

| நிறுவகம் | கற்கை | ஊடகம் | உள்வாங்கல் 2012 | 1ம் வருட மாணவர்கள் | 2ம் வருட மாணவர்கள் | 3ம் வருட மாணவர்கள் | 4ம் வருட மாணவர்கள் | பட்டம் பெற்றோர் எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம் | பபி. டிப்ளோமா | ஆங்கிலம் | 10 | | | | | 27 |
| | விஞ். முது | | 03 | | | | | 216 |
| | வி. நி. முது | | 03 | | | | | 40 |
| | தத். முது | | 03 | | | | | 22 |
| | தத். கலாநிதி | | 14 | | | | | 10 |
| | தற்காலிக | | 02 | | | | | |
| மொத்தம் | | | **35** | | | | | **315** |

## 6. வெளிநாட்டு மாணவர்கள்:

2012 ம் வருடத்தில் தத். கலாநிதி (ஆராய்ச்சி) பட்ட நிகழ்சித்திட்டத்திற்காக கானா வில் இருந்து ஒரு வெளிநாட்டு மாணவனை இந்நிறுவகம் பதிவு செய்திருந்தது. மியன்மார் மாணவி ஒன்று தனது கலாநிதி பட்டத்தினை நிறைவு செய்தார். நிறுவகம் தற்போது 3 வெளிநாட்டு மாணவர்களை தத். கலாநிதி பட்டங்களுக்காக கொண்டுள்ளது.

**அட்டவணை 3. வெளிநாட்டு மாணவர்களின் விபரமங்கள்**

| நிறுவகம் | கற்கை | ஊடகம் | உள்வாங்கல் 2012 | 1ம் வருட மாணவர்கள் | 2ம் வருட மாணவர்கள் | 3ம் வருட மாணவர்கள் | 4ம் வருட மாணவர்கள் | பட்டம் பெற்றோர் எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம் | பபி. டிப்ளோமா | ஆங்கிலம் | | | | | | |
| | விஞ். முது | | | | | | | |
| | வி. நி. முது | | | | | | | |
| | தத். முது | | | | | | | |
| | தத். கலாநிதி | | 01 | | | | | 01 |
| | தற்காலிக | | | | | | | |
| மொத்தம் | | | **01** | | | | | **01** |

## 7. 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி அலுவலர்கள் *(நிரந்தர அலுவலர் மட்டும்)*

பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட உதவி நூலகர் தவிர நிறுவகத்தில் வேறு கல்வி அலுவர்கள் நிரந்தர பதவியனியில் இல்லை. சகல கற்கைகளும் விவசாய பீடம், மற்றும் ஏனைய அரசாங்க, தனியார் நிறுவகங்கில் இருந்தும் வருகை விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுகின்றது.

**அட்டவணை 4. 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி அலுவலர்களின் விபரம்.**

| நிறுவகம் | விடயம் | ஊடகம் | சிரேஷ்ட பேராசிரியர். | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதகர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம | பணிப்பாளர் | ஆங்கிலம் | 01 | | | | | |
| | சிரேஷ்ட உதவி நூலகர் | | | | 01 | | | |
| | | **மொத்தம்** | **01** | | **01** | | | |

**8. a) 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி உதவி அலுவலர்கள் *(நிரந்தர அலுவலர்கள் மட்டும்)*:**

இந்த நிறுவகத்தின் கணினி நிரலாளர் மாத்திரமே கல்வி உதவி அலுவலர் பிரிவின் கீழ் இருக்கின்றார். ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் கல்வி உதவியாளர் பதவியணியினரைக் கொண்டு இருக்கவில்லை. இக்கல்வி சிலவேளைகளில் 40 க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டிருப்பின் தற்காலிக போனாசிரியரின் சேவையினைப் பெற்றுக் கொள்ளும்.

**அட்டவணை 5. நிரந்தர கல்வி உதவி அலுவலர் விபரம்**

| நிறுவகம் | மிக சிரேஷ்ட அலுவலர் 1 | சிரேஷ்ட அலுவலர் 2 | கனிஷ்ட அலுவலர் 3 | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம | 01 | -- | -- | -- |
| **மொத்தம்** | **01** | | | |

1 - நிருவாக மட்டம் & Executive Level
2 - சிரேஷ்ட அலுவலர் தரங்கள்
3 – எழுதுவினைஞர் & இணைந்த தரங்கள்
4 – மேலுள்ள தரங்களுக்கு கீழான

**8. b) 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி சாரா அலுவலர்கள் *(நிரந்தர அலுவலர்கள் மட்டும்)*:**

இந்த நிறுவகம் அதன் நிரந்தர பதவியணியில் 42 கல்வி சாரா அலுவலர்கள் இருக்கின்றனர். அவர்களில் 7 அலுவலர்கள் விவசாய நூலகத்தில் வேலை செய்கின்றனர்.

**அட்டவணை 5. நிரந்தர கல்வி சாரா அலுவலர் விபரம்**

| கிளை | மிக சிரேஷ்ட அலுவலர் 1 | சிரேஷ்ட அலுவலர் 2 | கனிஷ்ட அலுவலர் 3 | சிற்றூழியர்கள் 4 |
|---|---|---|---|---|
| நிருவாகம் | 02 | 02 | 04 | 10 |
| அனுமதி | 01 | - | 04 | 01 |
| கணக்குகள் | 01 | 01 | 05 | 01 |
| காங்கிரஸ் அலகு | - | - | 01 | - |
| விவ. ப. பி. நி நூலகம் | - | 02 | 02 | 03 |
| கணினி அலகு | | - | 01 | 01 |
| **மொத்தம்** | **04** | **05** | **17** | **16** |

1 - நிருவாக மட்டம் & Executive Level
2 - சிரேஷ்ட அலுவலர் தரங்கள்
3 – எழுதுவினைஞர் & இணைந்த தரங்கள்
4 – மேலுள்ள தரங்களுக்கு கீழான

## 9. ஆராய்ச்சி, புத்துருவாக்கம் மற்றும் வெளியீடுகள்

நிறுவகத்தின் சகல ஆராய்ச்சி மாணவர்களும் ஒரு பொது கருத்தரங்கில் அவர்களின் ஆராய்ச்சிகளை முன்வைக்க வேண்டும். 2012 ம் ஆண்டில் 32 மாணவர்கள் வெவ்வேறான நாட்களில் நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது கருத்தரங்கில் தமது ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை சமர்பித்தனர்.

'அயனவலய விவசாய ஆராய்ச்சி' என்ற சஞ்சிகையில் வருடாந்த காங்கிரசில் முன்வைக்கப்பட்ட அதன் கட்டுரைகள், நிறுவகத்தின் வருடாந்த காங்கிரஸ் அலுவலகத்தினால் பிரசுரிக்கப்படுகின்றது. 2012 இல் காங்கிரஸ் அலுவலகத்தினால் வெளியிட்ட 4 சஞ்சிகைகளையும் நிறுவகத்திற்கு பணம் செலுத்தி கொள்வனவு செய்ய முடியும்.

.

பிரசுரித்தல் நிதியின் கீழ் நிதியுதவி வழங்கி கல்வி அலுவலர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரசுரங்களை நிறுவகத்தின் பிரசுரித்தல் அலகு வெளியிட்டுள்ளது. இவ்வருடம் விற்பனைக்காக இலங்கையில் மன் மண் விஞ்ஞானம் தெடர்புடைய நூற்பட்டியல்' என்ற புத்தகம் ஒன்றை அலகு வெளியிட்டது.

**அட்டவணை 7. ஆராய்ச்சி, புத்துருவாக்கம் மற்றும் வெளியீடுகளின் விபரம்**

| விடயம் | வெளியிடப்பட்டவை | வர்த்தகமயமாகியவை | சமர்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆராய்சியாளர்களின் எண். | | | 32 |
| ஆ. புத்துருவாக்கங்களின் எண். | | | |
| இ. சஞ்சிகைகளின் எண். | 04 | 04 | |
| ஈ. புத்தகங்களின் எண். | 01 | 01 | |
| உ. கட்டுரைகளின் எண். | | | |
| ஊ. ஏனையவை | | | |
| **மொத்தம்** | **05** | **05** | **32** |

## 10. கற்கை நிகழ்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் -

விஞ். முது., தத். முது., கலாநிதி பட்ட நிகழ்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக 11 கற்கை சபைகளின் கீழ் 33 பட்ட நிகழ்சித்திட்டங்களை நிறுவகம் வழங்குகின்றது. 01 பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவும் கூட ஒரு கல்விச் சபையின் கீழ் வழங்குகின்றது. 32 ஆராய்ச்சி மாணவர்கள் வெவ்வேறான கற்கை சபைகளில் பொதுமக்களுக்கு ஆராய்ச்சி கருத்தரங்கின் கீழ் தமது கண்டு பிடிப்புகளை முன்வைத்தனர்.

அட்டவணை 8. நிகழ்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளின் விபரம்:

| விடயம் | கலந்து கொண்டவை | நிறைவு செய்யப்பட்டவை | சமர்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ப.பி. பட்ட நிகழ்ச்சிகளின் எண். | | | 33 |
| ஆ. ப.பி. டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண். | | | 01 |
| இ. பட்ட நிகழ்ச்சிகளின் எண். | | | -- |
| ஈ. டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண். | | | -- |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சிகளின் எண். | | | -- |
| ஊ. ஏனையவை – ஆராய்ச்சி கருத்தரங்கு<br>கருத்தரங்குகள்<br>பயிற்ச்சிப்பட்டறைகள்<br>குறுங் கற்கைகள் | | | 32<br>02<br>03<br>-- |
| **மொத்தம்** | | | **71** |

## 11. ஆராய்ச்சி விருதுகள்

மாணவர்கள் கருத்தரங்கிற்கும் மேலாக நாட்டின் விஞ்ஞான சமூகத்திற்கு ஆராய்ச்சி சமர்பித்தல்களை முன்வைப்பதற்கு மிகச்சிறந்த வாய்ப்பு ஒன்று இருக்கின்றது. ஒவ்வொரு அமர்வுகளிலும் சிறந்த ஆராய்ச்சி சமர்பித்தலுக்காக விருதுகள் வழங்கப்படுகின்றன. விவபபிநி இன் காங்கிரசில் 9 தேசிய மட்ட விருதுகள் 8 மாணவர்களினால் வெல்லப்பட்டது. இவர்கள் ஒரு அமர்வில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரை சமர்பித்தலுக்காக தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். ஒரு மாணவர் இரண்டுவிருதுகளை சிறந்த கட்டுரை சமர்பித்தலுக்காகவும் முழுவதிலும் சிறந்த ஆராய்சிக்கட்டுரைக்காகவும் பெற்றுக் கொண்டார்.

நிறுவகத்தின் ஒரு ஆராய்ச்சி மாணவர் சர்வதேச தாவர போசாக்கு நிறுவகத்தின் புலமை விருதைப் பெற்றிருந்தார்.

ஒரு விஞ்.முது. மாணவர் கலாநிதி AWR ஜோகிம் ஞாபகார்த்த விருதினை நிறுவகத்தின் முழுவதிலும் உச்ச மாணவனுக்காக 2012 வருடாந்த காங்கிரசில் பெற்றுக் கொண்டார்.

அட்டவணை 9. ஆராய்ச்சி விருதுகளின் விபரம்

| விடயம் | விருதுகளின் எண். | கல்வியாளர்களின் எண். | மாணவர்களின் எண். |
|---|---|---|---|
| அ. உள்ளூர் பரிசில்கள் | 01 | | 01 |
| ஆ. தேசிய பரிசில்கள் | 09 | | 08 |
| இ. சர்வதேச பரிசில்கள் | 01 | | 01 |
| ஈ. ஏனையவை | -- | | -- |
| **மொத்தம்** | | | **10** |

## 12. புதிய கற்கைகள்

இந்த நிறுவகம் 2012 ம் ஆண்டுக்காக புதிய கற்கைகளை வழங்கவில்லை. ஆனால் பமாஆ இன் தநி பேரவையின் தகுதி வடிவமைப்பிற்கு அமைவாக தற்போதுள்ள பாடவிதானத்தை மறுசீரமைப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. .

**அட்டவணை 10. ஆரம்பிக்கப்பட் புதிய கற்கைகளின் விபரம்**

| நிறுவகம் | கற்கைகள் | ஊடகம் | சான்றிதழ் | டிப்ளோமா | ப. பி. டிப்ளோமா | முதுமானி | தத் முது | தத் கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம் | -- | ஆங்கிலம் | | | | | | |
| | | | | | | | | |
| **மொத்தம்** | -- | | | | | | | |

## 13. விவசாய நூலக அறிக்கை

2012 ம் ஆண்டு காலப்பகுதியில் விவபபிநி மற்றும் விவசாய பீடம் ஆகிய இரண்டிற்காகவும் HETC கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 211 புத்தகங்கள் உள்ளடங்கலாக 449 புத்தகங்கள் நூலக தொகுப்புகளில் சேர்க்கப்பட்டது.

**தொகுப்புகளுக்கு சேர்க்கப்பட்ட புத்தகங்களின் விபரம்**

| | |
|---|---|
| விவபபிநி நிதியினால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 21 |
| பீடத்தின் ஒதுக்கத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 08 (inclusive of DVDs) |
| கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை (விவபபிநி & பீடம்) Faculty) | 31 |
| தொகுப்புகளுக்கு சேர்க்கப்பட்ட விவபபிநி இன் கட்டுரைகளின் எண்ணிக்கை | 09 |

**நன்கொடைகள்**

| | |
|---|---|
| விவபபிநி இற்காக HETC மானியத்தின் கீழ் கிடைத்த புத்தகங்களின் எண்ணிக்கை | 100 |
| பெறுமதி | ரூபா 1680754.03 |
| விவசாய பீடத்தின் இற்காக HETC மானியத்தின் கீழ் கிடைத்த புத்தகங்களின் எண்ணிக்கை | 111 (inclusive 11 DVDs) |
| பெறுமதி | ரூபா. 849321.80 |
| ஏனைய நன்கொடைகளில் இருந்து கிடைத்த புத்தகங்களின் எண்ணிக்கை | 198 |
| பெறுமதி | ரூபா. 250721.10 |
| சேர்க்கப்பட்ட புத்தகளின் மொத்த எண்ணிக்கை (கொள்வனவும் நன்கொடையும்) | 449 |

வெளிநாட்டு சஞ்சிகைகளின் கொள்வனவு கட்டளைகளில் விவசாய பீடத்தின் ஒதுக்கங்களில் அன்னளவாக 85% இனை செலவிட்டது. உபவேந்தரின் விசேட அனுமதியுடன் ஒரு முன்னனி விவசாய தகவல் தரவுத் தளம் CAB CD-ROM இற்கான சந்தாக்களை செலுத்தி சேவையளித்தது. புத்தகங்கள் சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதற்கு 2012 விவபபிநி இன் நூலகத்திற்கான பாதீட்டு நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**நூலக பயனர் வகைகள்**

2012 இல் பதிவு செய்திருந்த நூலக பயனர்கள் 2039 ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| பட்டப்பின்படிப்பு மாணவர்கள் | 1031 |
| பட்டப்படிப்பு மாணவர்கள் | 762 |
| கல்வி அலுவலர்கள் (நிரந்தரம்) | 226 |
| கல்வி அலுவலர்கள் (தற்காலிக) | 14 |
| எழுதுவினைஞர் மற்றும் சமனான சேவைகள் | 06 |
| மொத்தம் | 2039 |

**நூலக புத்தகங்களின் பயன்பாடு**

2012 இல் மொத்தமாக 4155 புத்தகங்கள் இந்த மாணவர்களிடையே வினியோகிக்கப்பட்டுள்ளது.

**உள்ளக - நூலக கடன்கள்**

2012 இல் இலங்கையின் ஏனைய நூலகங்களில் இருந்து ஆக்கங்களை பெறுவதற்கு கிடைக்கப்பெற்ற வேண்டுதல்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. 06 வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டதற்காக ஏனைய நூலகங்களில் இருந்து 04 ஆக்கங்கள் மாத்திரமே கிடைத்தது. விவசாய நூலகம் ஏனைய நூலகங்களில் இருந்து கிடைத்த 05 வேண்டுதல்களிற்காக 3 ஈக்கங்களை வழங்கியது.

***விவ.த.வ (விவசாய தகவல் வலையமைப்பு) உள்ளடக்கப் பக்க சேவை***

விவதவ சஞ்சிகை உள்ளடக்கப் பக்க சேவையின் கீழ் இலங்கையிலுள்ள விவசாய நிறுவகங்களின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் (NARS scientists) நன்மைக்காக இலங்கையின் விவசாய நூலகங்களிடையே சஞ்சிகை உள்ளடக்க பக்கங்கள் வினியோகிக்கப்பட்டு இருந்தது. இந்த விவசாய நூலகம் இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் விஞ்ஞானிகளுக்கு 56 சஞ்சிகை உள்ளடக்க பக்கங்களை வினியோகித்து இருந்தது.

**இலக்கியம் தேடுதல்**

CAB CD- ROM தகவல் தளம் விவபபிநி மற்றும் பீடம் ஆகிய இரண்டின் மாணவர்களின் ஆராய்ச்சியால் இலக்கிய தேடலுக்காக பயன்படுத்தப்பட்டது. 2012 ம் ஆண்டு காலப்பகுதியில் அறுபத்தி ஒன்று (61) CAB தேடுதல்களை மேற்கொண்டனர்.

**அயனவலய விவசாய ஆராய்ச்சி விற்பனை / பரிமாற்றம்**

விவபபிநி அயனவலய விவசாய ஆராய்சி சஞ்சிகையின் விற்பனை வேலை நூலகத்தினால் கையாளப்பட்டது.

2012 இல் விற்பனையான பிரதிகளின் எண்ணிக்கை - 20

ஏனைய நிறுவனங்களினால் அவர்கிளன் வெளியீட்டுக்காக பரிமாறப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை - 10

**தேவிம இன் தேசிய எண்முறைப்படுத்தல் கருத்திட்டம்**

நிறுவக களஞ்சியப்படுத்தலை மேம்படுத்துவதற்கான இந்த தேவிம கருத்திட்டத்திற்காக விவசாய நூலகத்தினை தெரிவு செய்தது.

**அலுவலர்களினால் பங்குபற்றிய பயிற்ச்சி / பயிற்சிப்பட்டறை**

1. ஐ. முதன்னாயக, சிரேஷ்ட உதவி நூலகர், விவசாய பீடம் அவர்கள் உள்ளூர் அரசாங்க பயிற்ச்சி நிறுவகம், நவயலதன்ன இல் 17.12.2012 அன்று பொது நூலகர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் வளவாளராக சேவையாற்றினார்.
2. டிகே திசாநாயக, சிரேஷ்ட அலுவலக உதவியாளர். தேவிம இனால் ஒழுங்கு செய்து கொழும்பு SLIDA வில் நடைபெற்ற தேசிய எண்முறைப்படுத்தல் மூன்று நாள் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றினார்.

**வெளியீடுகள்**

ஐ. முதன்னாயக, ஒரு கல்வி நூலகத்தில் சஞ்சிகை பயன்பாட்டைம திப்பிடல்: பேராதனைப் பல்கலைக்கழக விவசாய நூலகத்தில் ஒரு கள ஆய்வு.
இலங்கை நூலக மீளாய்வு Vol.26 June 2012:44-53

என். டி. பீரிஸ் மற்றும் பீ. எல. பீரிஸ் பட்டப்படிப்பு மாணவர்கள் தமது தகவல் தேவைகளுக்காக இ. வளங்களை பயன்படுத்துவதில் ஒரு மதிப்பீடு: பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு களஆய்வு.
இலங்கை நூலக மீளாய்வு Vol 26 June 2012: 30-43p

14. **நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சி பட்டங்கள்**

2012 ம் ஆண்டில் இந்த ஆராய்ச்சி பட்டங்களை நிறைவு செய்த மாணவர்களின் விபரம் பின்வருமாறு.

அட்டவணை **11.** நிறைவு செய்த ஆராய்ச்சி பட்டங்கள்

| | மாணவர்களி பெயர் | ஆராய்ச்சி கருத்திட்டம் |
|---|---|---|
| | **தத். முது பட்டம்** | |
| 1 | Ms. S.D.விக்ரமசிங்க | இலங்கையின் காலி மாவட்டத்துக்கான வரைபட ரீதியாக முன்னேற்றப்பட்டஇணைய அடிப்படையிலான சுற்றுலாபயணிகள் தகவல் முறைமை |
| 2 | Ms. S.N.திசாநாயக | விவசாய வியாபார ஏற்றுமதியில் புத்துருவாக்கம் மற்றும் மாற்றல்களின் தாக்கம் : தெற்காசிய |

| | | |
|---|---|---|
| | | பொருளாதாரத்திற்கான கருத்துரைகள் |
| 3 | Ms. H.K.S.G.குனதாச | போசாக்கு சமநிலையற்ற தன்மையையும், ஹோட்டன் சமவெளியில் வன dieback of syzygium rotundifolium இனது தாக்கத்தினையும் மதிப்படுதல். |
| 4 | Ms. D.I.M.அமரரத்ன | உலர் வலய வீட்டுத் தோட்டங்களின் பழங்களின் அன்டிஒக்சிசனேற்றல் செயற்பாட்டின் மாறிகள். |
| 5 | Mr. A.சுபசிங்க | உப்புத் தன்மையை சகிப்பதற்கான நெல்வகைகளை காட்சிப்படுத்துதல்: பயிர் செய்கை நடவடிக்கைகளிலும் விவசாய விளைச்சலையும் குறைக்கும் நடவடிகைகளிலும் கரையோர உப்புத்தன்மையினை சகிப்பதற்கான செல்வாக்கு |
| 6 | Ms. J.K.ஆரியவன்ச | அனுராதபுரம், நுவரவெவ இல் நீர் மற்றும் மிதவைகளை ஒன்றிணைவதன் பிசியோ இரசாயன குணாம்சங்கள். |
| 7 | Ms. K.V.N.N.ஜயலத் | இலங்கையின் தெங்கு துறையில் உலக சந்தை விலைகளின் தாக்கம் : விலைப் பரிமாற்ற செகிச்சி மற்றும் உள்நாட்டு வர்தக கொள்கை பற்றிய ஒரு பகுப்பாய்வு. |
| 8 | Ms. M.M.L.பிரியதர்சனி | சமுக பொருளாதார சுட்டி மற்றும் பங்காளி பகுப்பாய் என்பவற்றை உபயோகித்து மகாவலி சீ பிரிவின் விளைவுகளை பகுப்பாய்வு செய்தல். |
| 9 | Ms. H.P.ஹீனகம | நுவரெலிய மாவட்டத்தில் அதிக விவசாய பிரதேசங்களில் விவசாய ரீதியான நீர் மாசடைவின் தாக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு |
| 10 | Ms. S.P.P.N.கயானி | ஒரு பங்குபற்றல் அனுகுமறை ஊடாக வீட்டு கழிவு நீர் முகாமைத்துவம் - புசல்லாவ கள ஆய்வு |
| 11 | Ms. D.P.கருனாதாச | உள்ளக அவங்காரத்துக்கான சந்தைப்படுத்தப்படக் கூடிய பூச்சாடித் தாவரமாக உபயோகிப்பதற்காக வண்டி பரவ காலம் அல்லாத காலப்பகுதியில் poinsettia (Euphorbia pulcherrima Willd. ex Klotzsch)என்ற தாவரத்தை பூக்க வைத்தல் |
| 12 | Ms. W.M.S.K.வனிகசேகர | நுண் வர்தக நிறுவனங்களின் வியாபார விளைவுகளில் ஆளுமைப் பண்புகளின் தாக்கம் - கண்டி மாவட்டத்தில் ஒரு கள ஆய்வு. |
| 13 | Ms. A.A.K.K.ஜயவர்தன | ஹோட்டல் கைத்தொழில் துறையின் சந்தைசார், சேவைப் புதுமைகள், மற்றும் வியாபார விளைவுகள் (இலங்கையின் புராதன நகரங்கள் பற்றிய விசேட அவதானம்) |
| 14 | Mr. R.திவ்யாதர்சன் | இலங்கையின் உலர்வலய நிலைமைகளின் கீழ் ‘டெஸ்ட் செல்’ என்ற நில நிரப்புகையின் போது உயிரியல் தாக்கம் பற்றிய விளைவு மதிப்பீடு |
| 15 | Mr. K.A.J.தனன்ஜயா | வளர்ச்சி காரணிகளையும் உயிரவேதியல் விளக்கவுரைவிகளையும் உபயோகித்து இலங்கையில் தேயிலை (Camellia sinensis L.) கரவூவங்களை பண்பியலாக்கல். |

| | | |
|---|---|---|
| 16 | Mr. M.S.முகம்மத் நபீஸ் | சுனாமி ஏற்பட்டு ஐந்து வருடங்களின் பின் கிண்ணியா தம்பலகாமம் விரிகுடாவில் மீனவர்களின் சமுக பொருளாதார நிலைகளுக்கான ஒரு கற்கை. |
| 17 | Ms. H.M.K.V.ஹேரத் | மகாவலியின் நீர்த் தரத்திலும் தொடர்புடைய நீர் மூலங்களிலும் நெல் உற்பத்தியிலும் உர மானியத்தின் தாக்கம் |
| 18 | Mr. T.கிரிதரன் | இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நைட்ரிஜன் மூலம் செல்வாக்கு செலுத்ததப்பட்டதற்கு அமைவாக வெங்காய அலின் செபா பற்றிய ஊதா நிற nutsedge (Cyperus rotundus) அடர்த்தியின் தாக்கம். |
| 19 | Ms. Y.N.S.விஜேசுந்தர | நிலத்தில் ஊடுருவி நில இரசாயன பொருட்கள் மூலம் நீலக்கீழ் நீர் மாசுபடலை மதிப்பிடுதல். |
| 20 | Ms. D.M.C.S.மிம்ரோஸ் | கண்டி மாவட்டத்தில் சமுகநீர் வினியோக திட்டங்களின் சூழல் தாக்கம், மற்றும் நிலையான, சமுக பொருளாதார மதிப்பீடு |
| 21 | Mr. V.G.D.நயனக | மண் நில அழகுபடுத்தல் உறவுகளை உபயோகித்து மண் குணாதிசயங்களை டிஜிடல் வரைபடமாக்கல். |
| 22 | Ms. T.ஜயாருப | நெல் விவசாயத்தின் பாலின இயக்கவியல் தெளிந்தறிதல்: வவுனியா மாவட்ட பாவட்குள பிரதான நீர்பாசன திட்டம் பற்றிய ஒரு கள ஆய்வு. |
| 23 | Ms. E.A.A.தில்ருக்சி | சூரிய சக்தியில் இயங்கும் சவ்வுடுபரவல் நீர் வடிகட்டுதல்முறைமைக்கான ஒரு நுண் செயல் அடிப்படையிலான பதிக்கப்பட்ட அமைப்பின் அபிவிருத்தி. |
| 24 | Mr. A.J.கமகே | இலங்கையின் தாழ்நாட்டு ஈரவலயத்தில் தேயிலைக்கான (Cammellia sinensis L.) நிழலின் உச்சமட்டம் ஒன்றை வரயறுத்தல் |
| 25 | Mr. Y.B.இக்பால் | இதரத்துவ நெல் கலப்பு இனவிருத்திக்குப் பொருத்தமான மூலத்தாவரத்தை அடையாளப்படுத்திக் கொள்வதற்குரிய இணைந்த பகுப்பாய்வு |
| 26 | Ms. B.D.S.K.ஆரியவன்ச | மரபு சார் வடிவ அடிப்படையில் கரும்பு பரம்பரைத் தெரிவு – சுற்றாடல் இடைவினைகள். |

**கலாநிதி பட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 27 | Ms. K.T.சோயி | அரிசி (Oryza sativa L.) Rhizoctonia solani pathosystem இன் ஹோஸ்ட் கிருமி இடைத்தாக்கத்தின் மீது நுண்ணுயிர் உயிர்மூச்சிக் கொல்லிகளின் தாக்கம் |
| 28 | Mr. T.ஞானேசன் | நுவரலிய மாவட்ட தோட்ட பெண்கள் மத்தியில் பிரசவ மரண தடுப்பு தகவல் பயன்பாடு. |
| 29 | Mr. M.T.M.மஹீஸ் | இலங்கை, மகாவலியின் பிங்க ஓய கிளை நதியில் நீர் மாசுபடல், திண்ம கழிவுகள், என்பவற்றில் சமுக பொருளாதார, அரசியல் தாக்ககங்கள். |
| 30 | Mr. M.G.T.S.அமரசேகர | சிற்றாற்று நீர் தரத்தில் அதிகரித்த விவசாய |

| | | |
|---|---|---|
| | | செய்கையின் தாக்கம்: இலங்கை மேல் மகாவலி நீரந்து பகுதியில் ஒரு பலதுறை கற்கை. |
| 31 | Ms. A.R.F.சஹ்ரா | மரபனு வெளிப்பாடு விவரங்களின் அடிப்படையில் ஏ.ரி. 354 என்ற இலங்கை நெல் இனம் உவர் சகிப்புத் தன்மைக்கான மரபணுக்களை அடையாளப்படுத்தல். |
| 32 | Ms. D.A.U.D.தேவசிங்க | விவசாய நடவடிக்கைகளில் வைக்கோலிடலின் தாக்கம் மற்றும் தாழ்நில நேரடி நெல் விதைப்பின் போதான களை கட்டுப்பாடு. |
| 33 | Ms. I.P.P.குனவர்தன | சுகாதார வசதிகளின் சூழல், சமுக பொருளாதார தொழில்நுட்ப நிறுவக முன்னோக்குகள் : இலங்கை புஸ்ஸல்ல ஒயா நீரேந்து பகுதி. |
| 34 | Ms. H.M.I.ஹேரத் | ஜபோனிக இலிருந்து இந்திக என்ற நெல்லுக்கு இன்னுமொரு விவசாய செய்கை பொறுப்பை மாற்றுதல். |
| 35 | Mr. A.விஜேசூரிய | பிபரன்டல் மற்றும் பொலிகுரஸ் குடும்பங்களின் பகுப்பாய்வை உபயோகித்து கரும்பை நேடியாக இனப்பெருக்கம் செய்வதற்கான குறுக்கு எதிரவு கூறல். |

## 15. மீண்அடமும் செலவுகள்

| விடயம் | 2011 ரூபா. | 2012 ரூபா. |
|---|---|---|
| a. தனிப்பட்ட ஊதியம் | 32,281,916 | 39,408,203 |
| b. போக்குவரத்து | 86,548 | 69,593 |
| c. வழங்கல்கள் | 2,130,967 | 3,061,437 |
| c. பராமரிப்பு | 713,751 | 609,596 |
| e. ஒப்பந்தகார சேவைகள | 4,840,840 | 5,215,501 |
| f. ஏனையவைகள் | 12,240,319 | 13,441,217 |
| **மொத்தம்** | **52,294,341** | **61,805,547** |

## 16. மூலதன செலவுகள்

| விடயம் | 2011 ரூபா. | 2012 ரூபா. |
|---|---|---|
| a. அலுவலக உபகரனங்களினதும் தளபாடங்களினதும் பெறுகைகள | 70,826 | 2,988,881 |
| b. கற்பித்தல் & ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைகள் | 66,380 | 667,520 |
| c. கட்டமைப்பும் கட்டடங்களினதும் பெறுகைகள | | 267,937 |
| c. ஏனையவைகள் – புத்தகங்கள் சஞ்சிகைகள் | 325,087 | 8022 |
| மோட்டார் வாகனங்கள் | ------- | 8,350,000 |
| **மொத்தம்** | **462,293** | **12,282,360** |

## 17. கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

| விவரங்களின் பெயர் | கடன் / மானியம் | நிதியிடல் முகவர் | TEC ரூபா.. | RFA ரூபா.. | DF ரூபா.. |
|---|---|---|---|---|---|
| கெப்நெட் CAPNET | மானியம் | CAPNET தென்ஆபிரிக்கா | US $ 43702 (Rs.5462,750) | | |
| எல்கைளைக் கடந்த கருத்திட்டம் | மானியம் | DGIS நெதர்லாந்து | 75,035,938 | | |
| **மொத்தம்** | - | - | **80,498,688** | - | - |

18. கருத்திட்ட செலவுகள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

| பெயர் | TEC ரூபா. | 2011 இல் செலவு ரூபா. | 2012 இல் செலவு ரூபா. | 31.12.2012 இல் உள்ளவாறான சேர்ந்த செலவு ரூபா | உண்மையான முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| கெப்நெட் CAPNET | (US $43,702) Rs. 5,462,750 | 2,266,312 | 978,046 | 11,425,366 | 100% |
| எல்கைளைக் கடந்த கருத்திட்டம் | 75,035,938 | 12,314,322 | 455,072 | 67,199,750 | 100% |
| **மொத்தம்** | **80,498,688** | **14,580,634** | **1,433,118** | **78,625,116** | |

## 19. நிதி முன்னேற்றங்கள் (செலவுகள்)

| விடயம் | 2012 இல் ஏற்பாடு ரூபா | 2012 இல் செலவு ரூபா | சேமிப்பு/மேலதிகம் ரூபா |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் தவிர்ந்த மீளெழுந்தவை | 76,029,000 | 61,805,556 | 14,223,444 |
| ஆ. கருத்திட்டம் தவிர்ந்த மூலதனம் | 18,800,000 | 12,282,360 | 6,517,640 |
| இ. கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடல் | --- | 1,150,244 | (1,150,244) |
| ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடல் | --- | 1,433,118 | (1,433,118) |
| **மொத்தம்** | **94,829,000** | **76,671,278** | **18,157,722** |

Treasury approval was taken to utilize Rs. 9000,000 to purchase a vehicle out of generated funds.

## 20. நிதி முன்னேற்றங்கள் (உருவாக்கிய வருமானம்)

| வருமானத்தின் மூலம் | 2012 இல் ஏற்பாடு ரூபா | 2012 இல் சேர்ப்பனவு ரூபா | குறை/மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. பட்டப் படிப்புகள் | | | |
| ஆ. பட்டப்பின் படிப்புகள் | 66,229,000 | 68,248,122 | 2,019,122 |
| இ. ஆலோசனைகள் | --- | --- | --- |
| ஈ. ஏனையவைகள் | --- | --- | --- |
| **மொத்தம்** | **66,229,000** | **68,248,122** | **2,019,122** |

## 21. நிதியியல் விளைவுப் பகுப்பாய்வு - 2012

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு ரூபா |
|---|---|---|
| அ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு (RE) | RE/உறுதியான மாணவர்களின் எண். | |
| ஆ. ஒரு மாணவருக்கான மூலதன செலவு (CE) | CE/ உறுதியான மாணவர்களின் எண். | |
| | | |
| | | |
| மொத்தம் | - | |

## 22. கிடைக்கப்பெற்ற அடிப்படை வசதிகள் - 2012

| அடிப்படை கட்டமைப்பு விபரம் | செலவுகள் ரூபா | உண்மையான முன்னேற்றம் |
|---|---|---|
| | | |
| இல்லை | | |
| | | |
| | | |
| | | |

## 23. ஏனைய விபரங்கள் / இவ்வறிக்கையுடன் தொடர்பான விளைவுகள்

--

**24.** **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்கள்**

பின்வரும் நபர்கள் விவபபிறி இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்களாக சேவையாற்றினர்.

திருமதி. DBPS விஜேரத்ன - தலைவராக திறைசேரி பிரதிநிதி
திரு WDL குணரத்ன
கலாநிதி DBT விஜேரத்ன
சிரேஷ்ட உள்ளக கணக்காய்வு அலுவலர் பேராதனைப் பல்கலைக்கழகம்.
அரசாங்க கணக்காய்வு மேலதிகாரி - பார்வையாளராக
பிரதி பதிவாளர் , விவபபிறி

**25.** **கற்கை அவைகளின் தலைவர்களும் செயலாளர்களும்**

பின்வரும் நபர்கள் கற்கை அவைகளின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் சேவையாற்றினர்.

**விவசாய உயிரியல்**
கலாநிதி (Ms.) H.A.M. விக்ரமசிங்க (தலைவர்)
கலாநிதி. H.M.V.G ஹேரத் (செயலாளர்)

**விவசாய பொருளியல்**
பேராசிரியர். (Ms.) H.L.J. வீரஹேவா (தலைவர்)
பேராசிரியர். . L.H.P. குணரத்ன (செயலாளர்)

**விவசாய பொறியியல்**
கலாநிதி. D.A.N. தர்மசேனா (தலைவர்)
கலாநிதி. (Ms.) N.D.K. தயாவன்ச (செயலாளர்)

**விவசாய விரிவாக்கம்**
கலாநிதி. B.M.K. பெரேரா (தலைவர்)
கலாநிதி. J.A.S. de சில்வா (செயலாளர்)

**விலங்கு விஞ்ஞானம்**
பேராசிரியர். C.M.B. தெடவெவ (தலைவர்)
கலாநிதி. T.S. சமரகோன் (செயலாளர்)

**உயிர்புள்ளிவிபரவியல்**
பேராசிரியர். C.M.B. தெடவெவ (தலைவர்)
கலாநிதி. T. சிவாநந்தவேல் (செயலாளர்)

**வியாபார நிருவாகம்**
பேராசிரியர். . L.H.P. குணரத்ன (தலைவர்)
பேராசிரியர். (Ms.) H.L.J. வீரஹேவா (செயலாளர்)

**பயிர் விஞ்ஞானம்.**
பேராசிரியர். W.A.J.M. de கொஸ்தா (தலைவர்)
கலாநிதி. (Ms.) R.M. பொன்சேகா (செயலாளர்)

**உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்**
பேராசிரியர். D.G.N.G. விஜேசிங்க (தலைவர்)
கலாநிதி. W.M.T. மதுஜித் (செயலாளர்)

**தாவர பாதுகாப்பு**
கலாநிதி. (Ms.) D.M. de கொஸ்தா (தலைவர்)
கலாநிதி. K.S. ஹேமசந்திர (செயலாளர்)

**மண் விஞ்ஞானம்**
கலாநிதி (Ms.) S.P. இந்திரரத்ன (தலைவர்)
கலாநிதி W.A.U.விதாரன (செயலாளர்)

## 1. 2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு அறிக்கை

மீளாய்வாண்டின் போது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் தொழிற்சங்க நடவடிக்கை இருந்ததால் பல்கலைக்கழக முறைமை முழுமையாக செயற்படாவிட்டாலும் நிறுவகத்தின் கணக்காய்வு குழு மூன்று முறை நடாத்தப்பட்டிருந்தது. பங்குபற்றிய உறுப்பினர்கள் தொடர்பான பதிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| உறுப்பினர்களின் பெயர் | எந்த நிறுவகத்தில் இருந்து இணைக்கப்பட்டனர் | வருகை தந்த தடவைகள் |
|---|---|---|
| கலா. அமரா சத்ரசிங்ஹ தலைவர் பணிப்பாளர் நாயகம் (திறைசேரி பிரதிநிதி) | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் | 03 |
| திரு.டப்.டி.எல்.குணரத்ன பணிப்பாளர் நாயகம் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 03 |
| கலா.டி.பி.விஜேரத்ன மேலதிகச் செயலாளர் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 01 |
| பேராசிரியர். கே. சமரசிஹ் பீடத் தலைவர் | விவசாய பீடம் பேராதனைப் பல்கலை. | 02 |

இக் கூட்டத்தில் கணக்காய்வு அத்தியட்சகர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர். நிறுவகத்தின் பணிப்பாளர் அவதானிப்பாளராக பங்கெடுத்தார்.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் அபிப்பிரராயத்திற்கு இணங்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- நிறுவகத்திற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்றை தயாரித்தல்.
- மீளாய்வாண்டில் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல்.
- எரிபொருள் நுகர்வு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் வாகனங்களை முறையாக பராமரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்.
- கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடாத்துதல்

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கல்விசாரா பதவியணியனருக்கு வழங்குவதை இடைநிறுத்துவதற்கும்
- 2012 – 2016 வரை கூட்டுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கும் 2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

சகல பதவியணியினரினதும் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்காக நிலுவையையும் ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கான ப.சே.நி. கொடுப்பனவையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் கணக்காய்வு செய்வதற்கும் அவர் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த செயற்பாடுகளுக்கான கொடுப்பனவையும் கணக்காய்வு செய்தார். அவர் நிறுவகம் பின்பற்றிய முறைமைகளை பரிசோதித்ததுடன், சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்ட நடவடிக்கைகளையும் பரிசோதித்து கணக்காய்வு குழுவிற்கு முன்வைத்தார். கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் முகாமைச் சபையின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கப்பட்டது. இணக்கமின்மைகள் ஏற்படும் போது தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

**செயலாற்றல் பொழிப்பறிக்கை, 2012 கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு பின்பற்ற பொறிமுறைமை**
**விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம், (PGIA), பேராதனைப் பல்கலைக்கழகம்.**

## 1. செயலாற்றல் பொழிப்பறிக்கை

விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் 1975 யூன் மாதம் 1979 இன் 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் பட்டப்பின்படிப்பு கல்வியை மேம்படுத்தும் வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைணந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது முக்கியமானதும் புத்தாக்க நடவடிக்கைகள் என்பவற்றை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் முகாமையால் மேற்கொள்ளப்பட்டன. விபரங்கள் கீ காட்டப்பட்டுள்ளன.

### 1.1 கல்விசார் செயலாற்றல்

### 1.1.1 மாணவர்களை அனுமதித்தல்

427 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 236 மாணவர்கள் பட்டங்களைப் பெறுவதற்கு பதிவு செய்யப்பட்டிருந்தனர். முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு, தத்துவமானி, கலாநிதி மற்றும் வியாபாரப் புள்ளிவிபரவியலில் பட்டப்பின் டிப்ளோமா பட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முறையே 47,27 மற்றும் 18 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். அவர்களில் ஒரு மாணவர் வெளிநாட்டு மாணவராக இந்து பதிவு செய்யப்பட்டவராவர். எனினும் மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3090 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் முதல் 06 மாதத்தின் போது கல்விசார்ந்த மற்றும் கல்வி சாராத ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மாணவர் பதிவு முறையில் சிறிய பின்னடைவு காணப்பட்டது.

### 1.1.2. பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

அனைத்து கல்வி சபைகளும் தொழிற்துறைகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு விவசாயத்தின் விளிம்பில் குறைந்த அறிவுடைய அக்கரையுடைய தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு நடைமுறையிலுள்ள பாடநெறிகளை மீளமைத்தது. மீளாய்வாண்டின் போது எந்தவொரு புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்படாத போதும் 01 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி உட்பட 34 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதற்குப் புறம்பாக 32 ஆய்வுக் கருத்தரங்குகளும் 02 ஏனைய கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.
மீளாய்வாண்டின் போது 315 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன், அது தொடர்பான பட்டியல் கீழே காட்டப்பட்டுள்ளது.

- PG Diploma 27
- M.Sc. 216
- MBA 40
- M.Phil 22
- Ph.D 10

## 1.1.3. கற்ப்பித்தல் /கற்றல் நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் போது கற்றல் கற்பித்தல் வசதிகள் என்பன விரிவாக்கப்பட்டன. கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அதாவது மாணவர்களுக்கான கலை விரிவுரை வகுப்பு அறை வசதிகள் வழங்கப்பட்டது.

- விரிவுரைகள் மற்றும் பரீட்சைகளின் போது மாணவர் வரவினைப் பதிவுசெய்தல்
- ஒவ்வொரு பாடநெறியும் முடிவடையும் போது பாடநெறி/ ஆசிரியர் மதிப்பாய்வினை மேற்கொள்ளல்.
- ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்கு வெளியக பரீட்சகர்களைத் தெரிவு செய்தல்.

## 1.1.4. வி.ப.பி.நி ஆய்வு காங்கிரஸ்

தேசிய முக்கியத்தவம் வாய்ந்த பிரச்சினைகளை தீர்வு செய்யக்கூடிய வகையிலான ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது. நாட்டில் காணப்படும் CARP, NSF போன்ற முதன்மை ஆராய்ச்சி நிறுவனங்களின்ஒத்துழைப்புடன் ஆய்வுச் செயற்திட்டங்கள் இனங்காணப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது 4 Ph.D மாணவர்களுக்கும் 04 M.Phil பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்குமாக 08 பேருக்கு செயற்திட்டத்திலிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாக இருந்தது. விவசாயத் திணைக்களம், CIC மற்றும் IDRC போன்ற நிறுவகங்களுடன் ஆய்வில் ஈடுபடும் மாணவர்களுக்கு அனுசரணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு PGIA தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்தது.

PGIA இன் ஆய்வுகளின் உச்சகட்டமாக வருடாந்த காங்கிரஸ் 2012 நவம்பர் 15 – 16 ஆகிய தினங்களில் 550 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பங்கபற்றுனர்களுடன் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் இந்தியா, பாகிஸ்தான் ஆய்வாளர்கள் இவ்வாண்டு பங்குபற்றினர். சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. ஜே.பேர்ட் இந்த நிகழ்ச்சியின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவுஸ்திரேலியா, நெதர்நாந்து மற்று இலங்கையின் பொன்டேரா கிளையிலிருந்து விசேட பேச்சாளர்களாக வருகை தந்தனர். முறையே 30 மற்றும் 15 பத்திரிகைகள் மற்றும் சுவரொட்டிகள் சமர்ப்பிபதற்காக தெரிவுசெய்யப்பட்டன.

**Tropical Agricultural Research"** என்ற சஞ்சிகையும் ஏனைய 4 சஞ்சிகைகளும் உட்பட வருடாந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் என்பன வெளியிடப்பட்டன. அதற்கு மேலாக பின்வரும் மாணவர்கள் ஆராய்ச்சி திறமைசாலிகள் என இனங்காணப்பட்டனர்.

1 செல்வி. மேரிசெல்வம் என்ற மாணவர் 2012 இன் சர்வதேச தாவார போசணை நிறுவகத்தின் விருதளிக்கப்பட்டார்.

2. திரு.ஜி.ஏ.பீ.கல்கமுவ என்ற M.Sc மாணவன் நிறுவகத்தின் சிறந்த மாணவர் என்தற்கான கலா.ஏ.டப்.ஆர்.ஜோகிம் ஞாபகார்த்த விருதை பெற்றுக்கொண்டார்.

### 1.1.5. கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய ஏனைய களச் செயற்பாடுகள்.

02 கருத்தரங்குகள், 03 செயலமர்வுகள் என்பவற்றை PGIA இன் நீடிக்கப்பட்ட பதவியணியினரால் நடாத்தப்பட்டன. அதில் 01 ஜப்பானின் சைதாமா மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டன.

### 1.1.6 பொது

- கல்விசார் பரிமாற்றங்களை மேம்படுத்தும் நோக்கில் PGIA இற்கும் Melbourne School of Graduate School இடையே பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் கலாநிதி பட்டத்திற்கு வசதிகள் வழங்கல் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.
- கானா நாட்டிலும் அதனை அண்மித்து உள்ள நாடுகளிலும் உயிரியல் புள்ளிவிபவியல் துறையில் முதுமானிப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் PGIA மற்றும் யேஸுவா தொழிநுட்ப நிறுவனம், கானா ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல்கள் நடைபெற்றன.
- நிறுவன ரீதியான வைப்புக்களை மேற்கொள்வதற்காக இலத்திரனியல் மயப்படுத்துவதற்காக தேசிய விஞ்ஞான அமைப்பினால் விவசாய பீட நூலகம் தெரிவு செய்யப்பட்டது.

## 2 2012 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றல்

### 1.2. மீண்டுவரும் செலவினம் – 2012

2012 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கான திறைசேரியின் மீண்டுவரும் செலவின ஏற்பாடு 15.4 மில்லியனாக இருந்ததுடன், மூலதன ஏறபாடு ரூபா 9.8 மில்லியனாக இருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 7 மில்லியன் மற்றும் 1.7 மில்லியன் குறைவாக இருந்தது. இவ்வாண்டிற்கான உள்ளவாறான மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம் முறையே ரூபா 57.96 மில்லியன் மற்றும் ரூபா 12.28 மில்லியனாகும். மொத்த மீண்டுவரும் செலவினத்தில 80 சதவீதம் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட நிதிகளும் 20 சதவீதம் திரட்டு நிதியிலிருந்தும் நிதியளிக்கப்பட்டது. மீண்டுவரும் செலவினத்தில் 68% ஆளணிக்காக அதாவது நிரந்தர உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் கூலிகள் மற்றம் வருகை விரிவுரையாளர்களுக்கான கட்டணங்களுக்காக இருந்தது. ஏனைய மீண்டுவரும் செலவினம் பாடநெறி உபகரணங்கள், விசேட சேவைகள், பல்கலைக்கழக பதவியணிக்கான பிரயான மானியங்கள், வருடாந்த மாநாடுகள் போன்றவற்றிக்காக மீளாய்வாண்டின் மொத்த மீண்டுவரும் செலவினத்தில் 15 ஆக இருந்தன. மீண்டுவரும் செலவினத்தின் உள்ளடக்கம் 2.1 இல் தரப்பட்டுள்ளன.

### 2.2. மூலதனச் செலவினம்

PGIA ஆய்வு நடவடிக்கைகளுக்காக பாதீட்டின் 68% சதவீதமான மூலதன முதலீடு அதாவது ரூபா 8.35 மில்லியன் செலவில் 15 ஆசனங்களை கொண்ட வாகனத்தைக் கையேற்பதற்கு பயன்படுத்தப்பட்டது. அத்துடன் 24% மூலதனப் பாதீட்டில் கணனி ஆய்வுகூடம் மற்றும் வகுப்பறை வசதிகள் என்பவற்றிற்கான உபகரணங்களை மேம்படுத்தவும் ஒதுக்கப்பட்டது. இப்பாதீட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட 1.6 பில்லியன் தொகை புதிதாக உருவாக்கப்பட்ட பல்கலைகழகங்களின் உட்கட்டமைக்கப்பட்ட வசதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. பல்கலைகழக சமூகத்தின் இயலுமை விருத்திக்கு மூலதன முதலீடு 16.7 சதவீதம் ஆகும்.

3. நிறுவகத்தின் பெறுபேற்றை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**நிறுவகத்தின் பெறுபேற்றை அதிகரிக்க எடுக்கப்பட்ட தந்திரோபாயங்களின் சாராம்சம்**

நிறுவகத்தின் பெறுபேற்றை மேம்படுத்த பின்வரும் தந்திரோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. உலக வங்கியின் உதவியுடன் PGIA அனைத்து நடவடிக்கைகளையும் கணனிமயப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது பதிவு செய்தல் நடவடிக்கைகள் மற்றும் அனுமதிகள் போன்றவற்றிற்காக தரவுகள் முழுமையாக உள்ளீடு செய்யப்பட்டதுடன் பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. PGIA இன் இணையத்தளமும் மேம்படுத்தப்பட்டுள்ளதால் மாணவர்களைக் கவர்வதற்கும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை இணையத்தளம் மூலம் வழங்குவதற்கும் முடியுமாக உள்ளது. பல்கலைக்கழக முறைமையில் உள்ள நிறுவகங்களில் தரப்படுத்தலில் முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

3. ஆண்டின் இறுதியில் பழைய கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்கு திறைசேரியின் அங்கீகாரத்துடன், நடவடிக்கை எடுத்துள்ளதுடன், விருந்தினர் விடுதியை விரிவாக்குவதற்கான நிர்மாண வேலைக்கும் தளபாடங்கள் மற்றும் வகுப்பறைகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் புதிய வகுப்பறை கட்டிடத்தொகுதிக்கு வர்ணம் பூசுவதற்கும் நூலக உபகரணங்களையும் கொள்வனவு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. PGIA ஆனது HETC செயற்திட்டம் மற்றும் நன்கொடை அளிப்போரின் செயற்திட்டங்கள் மூலம் உழைத்த வருமானத்தைக் கொண்டு மாணவர்களுக்கும் பதவியணியினருக்கும் வசதிகளை வழங்குவதற்காக வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன்,

4. சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய கட்டணங்கள் மீளமைக்கப்பட்டதுடன்,அதே நேரம் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் அறிவை பெருக்குதல்

   உயிர் பல்வகைமை மற்றும் முகாமைத்துவ அனுபவம் என்பனவற்றைப் பயன்படுத்தி செயல்ரீதியான அனுபவம், நவீன அறிவும் நவீன தொழிநுட்பத்துடன் இணைந்த பாரம்பரிய விவசாய தொழிநுட்ப அறிவும் உடைய திறமையான பட்டதாரிகளை நிறுவகத்தலிருந்து வெளியேற்றுவதற்காக கல்விச் சபையின் கல்விசார் பிரமாணங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

   தொழிற்துறையில் புதிய பங்குடைமைகளை ஏற்படுத்தல். பரஸ்பர நன்மைகளுக்கான ஏற்கனவே இருக்கும் பங்குதாரர்களை பலப்படுத்தல்,

5. PGIA இன் கற்பித்தல் மற்றும் கற்றல் சூழல்களை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்ததுதல்

6. மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பதவியணியினருக்குமான ஒழுக்க விதிக் கோவையொன்றை ஆரம்பித்தல்

7. பல ஆண்டுகளாக எதிர்பார்க்கப்பட்ட PGIA இன் பதவியணியினரின் பெறுபேறு மட்டத்தை அதிகரிப்பதற்காக ஆசிரிய அபிவிருத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு ஆங்கிலம், மனப்பாங்கு மற்றும் கணனி பயிற்சி என்பன ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. — CL/KD/J/ABDE/PGIA/ 2013/18 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | දිනය<br>திகதி<br>Date — 28 February 2014 |

The Director
Postgraduate Institute of Agriculture

Report of the Auditor General on the Financial Statements of the Postgraduate Institute of Agriculture for the year ended 31 December 2012 in terms of Section 108(1) of the Universities Act, No. 16 of 1978.

---

Reference to my letter of even number dated 05 December 2013 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

W.P.C. Wicramarathne
Acting Auditor General

SAB
f.y. records
13/3/14

Copies to :- 1. Secretary, Ministry of Higher Education
2. Secretary, Ministry of Finance and Planning
3. Chairperson, University Grants Commission
4. Vice Chancellor, University of Peradeniya

306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
**No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka**

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 / 034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } சீஎல்/கேடி/ஜே/ஏபிடிஈ/ பிஜிஐஏ/2013/18

ඔබේ අංකය / உமது இல / Your No. }

දිනය / திகதி / Date } 2013 திசெம்பர் 05

பணிப்பாளர்,

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு, 108 மற்றும் 111 பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2013 யூன் 18 ஆம் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

---

306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය

ෆැක්ස් අංකය

ඉලෙක්ට්‍රොනික් තැපැල්

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

2 நிதிக்கூற்றுக்கள்

---

2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

---

இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 16 இன் பிரகாரம் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக இருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 75,532,817 பெறுமதியான 05 நிலையான சொத்து உருப்படிகள் மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடமொன்றை புதுப்பிப்பதற்கான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு முன்னர் அதற்காக மதியுரைக் கட்டணமாகச் செலுத்திய ரூபா 267,937 ஆன முற்பணத் தொகையை நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பெயர்ப்பலகைக்காக செலுத்தப்பட்ட ரூபா 175,000 நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஏனைய செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 31,364,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதன் பெறுமதி ரூபா 30,758,250 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஆண்டிற்குரிய பாடநெறிக் கட்டணம் ரூபா 605,750 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2008 மார்ச் 08 இல் உள்ளவாறு ரூபா 2,589,277 கிரயமான மோட்டார் வாகனமொன்று ரூபா 2,250,000 என மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதிக்கு இடையிலான வேறுபாடான ரூபா 339,277 தொகை 2011 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்த போதும், அத்திகதியில் மோட்டார் வாகனங்களின் திரட்டிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 2,429,548 ஐ கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் ரூபா 57,343,541 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 12,013,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையில் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 12,589,380 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 576,380 வேறுபாடாக இருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கீழே காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணியும் கட்டிடங்களும் | 65,308,307 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,580,328 | - மேற்படி - |
| அலுவலக உபகரணங்கள் | 7,262,331 | - மேற்படி - |
| மோட்டார் வாகனங்கள் | 14,495,000 | - மேற்படி - |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 33,702,296 | - மேற்படி - |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 44,488,869 | - மேற்படி - |
| | 166,837,131 | |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடனும் பணம் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 62,200,000 ஆன தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 188 | 2012 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தீர்வையாகாத ரூபா 17,070 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 ஆம் பந்திகள் | 30 நாட்களுக்கு மேல் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட 14 பிரயாணச் செலவின விண்ணப்பங்களில் இருந்து ரூபா 16,856 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சுற்றறிக்கை<br>------------------ | |
| | (i) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பந்தி | சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை |
| | (ii) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை/ பல்கலைக் கழகங்கள் தாபன விதிக்கோவையின் xxvii ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவு | 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களில் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்திடம் காணப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக 03 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரை அந்தப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(iii) 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய PE 1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை

பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நிறுவகங்களில் பணிபுரிவதற்காக கொடுப்பனவு களை மேற்கொள்ளும் போது அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் 2012 ஆம் ஆண்டின் போது குறுகியகால பாடநெறி கூட்டிணைப்புக் கொடுப்பனவுகள் விரிவுரை மற்றும் செயல்முறை பரிசோதனைக் கட்டணம் கொடுப்பனவுகள் என்பவற்றிற்காக 13 சந்தர்ப்பங்களில் ரூபா 417,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

## 2.2.6 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/774/11 (ஆ) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் படி இரண்டாம் மூன்றாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவாக 1996 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,275,179 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தம்பர் 15 ஆம் திகதிய PED/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்காக நிறைவேற்று பணிப்பாளர் அல்லாத குழு உறுப்பினர்களுக்கு மாத்திரம் ரூபா 1,000 வீதம் கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 09 கல்விச்சபை செயலாளர்களுக்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாதமொன்றுக்கு ரூபா 1,000 வீதம் 09 கல்விச்சபைகளுக்காக ரூபா 324,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

3 நிதி மீளாய்வு

நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற்கொள்வதற்கு முன்னர் ரூபா 5,871,268 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 15,400,000 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் அது ரூபா 21,271,268 ஆன மிகையாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னரான பற்றாக்குறை ரூபா 5,369,318 ஆக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 22,585,072 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் இப்பற்றாக்குறை ரூபா 17,215,754 ஆன மிகையொன்றாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொண்டதன் பின்னர் நிதி விளைவுகளில் ரூபா 4,055,514 ஆன மிகையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் அமைந்துள்ள காணியின் உரிமை பேராதனைப் பல்கலைக்கழகத்திடம் இருந்து வருவதுடன், அந்தக் காணியில் 2012 திசெம்பர் 31 வரையில் ரூபா 65,308,307 தொகை செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், காணியின் உரித்தை சட்டரீதியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

---

வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2012 மார்ச் 13 ஆம் திகதி நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 7,950,000 ஆன வான் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த வழங்குனரின் விலை கூறல் செல்லுபடிக்காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அந்த வாகனத்தை ரூபா 8,350,000 தொகைக்கு கொள்வனவு செய்த காரணத்தால் இணங்கப்பட்ட விலையை விட ரூபா 400,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

நிறுவகத்தின் பணிப்பாளரால் பயன்படுத்தப்படுகின்ற வாகனத்திற்குரிய மாதாந்த எரிபொருள் செலவினத்தை மீள்நிரப்புவதற்காக 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 29,643 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

4.4 நிதியத்தின் குறைப் பயன்பாடு

---

03 வெளியக ஆய்வு நடவடிக்கைகளுக்காக 2010 சனவரி 01 ஆம் திகதி வரையில் நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 653,318 ஆன பணம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்று காணப்பட்டன.

4.5 தாமதமான செயற்திட்டங்கள்

---

நிறுவகத்தின் கணனி பயிற்சி நிலையத்திற்குள் நுழையும் மாணவர்களை இனங்காண்பதற்கும் பதவியணியினர் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகளை செய்வதற்காக இனங்காணும் அடையாள அட்டை முறைமையொன்றை தாபிப்பதற்காக 2010 யூன் 07 ஆம் திகதி ரூபா 216,092 ஆன முற்பணத் தொகையும், 2012 திசெம்பர் 31 ஆம் திகதி அதற்குரிய பகுதிக் கொடுப்பனவாக ரூபா 326,819 தொகையுமாக மொத்தம் ரூபா 542,911 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 ஏப்ரல் மாதம் வரையில் அம்முறைமை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு, மீளாய்வாண்டில் ரூபா 15,246,638 தொகை விரிவுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வளப் பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 12,589,380 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 கல்விக் குழு

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளையின் 14(7) உப பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது 06 தடவைகளாவது கல்விக் குழுக் கூட்டத்தொடர்கள் நடாத்த வேண்டிய போதிலும், நிறுவகத்தில் செயற்படுகின்ற 07 கல்விக் குழுக்களானது 03 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட கூட்டத் தொடர்கள் அளவில் நடாத்தப்பட்டிருந்தன.

5.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.4 கணக்காய்வுக்குழு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு குழு மூலம் தமது தீர்மானத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்காதிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் விடயப் பரப்பிற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(அ) உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்கள் குறிப்பாக கூறப்படாமை மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்யாமை

(ஆ) நிறுவகத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற சகல செயற்பாடுகளுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்தலும் மதிப்பாய்வு செய்தலும்

(இ) வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்காக அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை

(ஈ) பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்/ வழிகாட்டு தொடர்பான மீளாய்வு

(உ) உள்ளகக் / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவ கடிதங்க தொடர்பாக மீளாய்வும் தொடர் நடவடிக்கைகளும்

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் வரைவுப் பாதீடு நிதிய ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் முகாமைத்துவ சவ அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வா வரைவுப் பாதீட்டிற்காக 2012 மார்ச் 30 ஆம் திகதி அங்கீகாரம் ( கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் செலவின மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 12 செலவின விடயங்களுக்கு மதிப்பிடப்பட்ட செலவினத்தை மிகைத்து ரூபா 2,294,209 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படாத 02 செலவின விடயங்களுக்காக ரூபா 395,858 செலவிடப்பட்டிருந்தது. 02 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 950,000 செலவு செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றை ஒப்பிடும் போது 12 செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 9,252,404 ஆல் அடையப்பட்டிருக்கவில்லை. 09 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து ரூபா 13,390,089 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான கட்டுப்பாடு

(ஈ) நூலகப் புத்தகங்களின் பாவனை

எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2.2 விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயார் செய்யப்பட்டு முடிவடையாமையால், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய புத்தகப் பெறுமதியை குறிப்பாக இனங்காணுவதில் பலவீனங்கள் காணப்பட்டதுடன் தற்போது நிலையான சொத்துப் பதிவேடொன்று தயார் செய்யப்பட்டு பூர்த்தி அடையும் நிலையில் உள்ளதால் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதி பூச்சியமாக உள்ள சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.2. அ). கட்டட நவீனமயப்படுத்தலுக்காக செலுத்தப்பட்ட மதியுரைக் கட்டணமான ரூ.267,937 ற்பணமானது நிலையான சொத்தான கணக்குப் பதிதலில் காணப்பட்ட குறைபாடானது 2013 ல் தயாரிக்கப்படும் கணக்கு வெளிப்படுத்தங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ). வருடத்திற்கான பாதீடு மூலமாக நிறுவனத்தின் மூலதன செலவுகளுக்காக பெறப்பட்ட ஒதுக்கு நிதியானது போதுமானதாக அமையாததால் 2012.01.03 திகதிய கடிதத்தின் மூலமாக நிறுவனத்தில் உழைக்கப்படும் வருமானத்திலிருந்து குறித்த செலவுகளை செய்வதற்கான அனுமதி பெறப்பட்டது. அவ்வாறு உழைத்ததிலிருந்து செலுத்தப்பட்ட மூலதன செலவுகளை கணக்கீட்டு வருடத்தின் மேலதிக பெறுமதியிலிருந்து கழித்து மூலதன செலவாக இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறு உழைத்ததிலிருந்து செய்யப்படும் மூலதன செலவுகளுக்கான தொகையை மூலதன கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இ). 2012ம் ஆண்டிற்கான கற்கைநெறி கட்டணங்களை கணக்குகளில் பதியும்போது 2010 மற்றும் 2011 ஆண்டுகளுக்கான பதிவுசெய்த மாணவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய கற்கைநெறிக் கட்டணங்களையும் உள்ளடக்க வேண்டியிருந்தாலும் குறித்த ஆண்டிற்கான சரியான தரவுகளை பெறுவதிலிருந்த பிரச்சினை காரணமாக சரியான ஆண்டுகளில் குறித்த ஆண்டிற்கான வருமானங்களை சரியாக கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன்.

ஈ). 2008 மார்ச் 3ம் திகதி மீதியான ரூபா 2,589,277 ஆன மோட்டார் வாகனம் ரூபா 2,250,000 ஆக மீள் மதிப்பீடு செய்வதற்கான இணக்கப் படுத்தல் பேரேட்டு இல. JV/128/2011 மூலமாக ரூ. 2,429,548.33 திரட்டிய பெறுமானத் தேய்வு பெறுமதியானது நாளேட்டு இலக்கம் JV/129/2011 மூலமாக ரூ. 2,250,000 ஆன மீள்மதிப்பீட்டு பெறுமதியும் நாளேட்டு இலக்கம் JV/130/2011 மூலமாக அங்கு மீள்மதிப்பீட்டு இலாபமான ரூ.2,090,271.32 ஆன பெறுமதியும் 2011 ஆம் ஆண்டில் கணக்குகளில் பதியப்பட்டடுள்ளன.

உ). கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு 2007 முதல் 2011 வரையான ஆண்டுகளுக்கான பதிவு செய்த மாணவர்களில் சட்டரீதியாக கற்கைநெறி காலப்பகுதியை நீடித்துக்கொண்ட மற்றும் கற்கை நெறியை இடையில் நிறுத்திக்கொண்ட மாணவர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறவேண்டிய கற்கை நெறிக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் கணக்குகளில் பதியப்பட வேண்டும். எனினும் குறித்த வருடத்திற்கான சரியான தரவுகளை பெறுவதிலிருந்த பிரச்சினைகள் காரணமாக முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளில் குறித்த பெறவேண்டிய தொகைகள் கணக்குகளில் காட்டப்படவில்லை. எனினும் சமீபத்தில்

கொள்வனவு செய்யப்பட்ட கணணி இயந்திரத்தில் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு வருவதோடு எதிர்வரும் ஆண்டிலிருந்து இறுதிக் கணக்குகளில் இந்த பெறவேண்டிய கட்டணங்களை கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
எனினும் இறுதிக் கணக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் இல.6.2 மூலமாக இந்த பெறவேண்டிய கற்கை நெறிக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணங்களுக்கான ஐயக்கடன் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2.2.3. கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு முடிவடைந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியாக காட்டப்பட்டுள்ள ரூ. 12,013,000 பெறுமதியானது ரூ. 12,282,360.72 ஆகவும் பட்டோலையில் குறிப்பிடப்பட்ட ரூ. 12,629,380 ஆனது ரூ. 12,575,683..22 ஆகவும் சீர்செய்யப்பட வேண்டும். அதன்படி இப்பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கான காரணம் தொலைத்தொடர்பு நூலக புத்தகங்களுக்கான மேற்கொள்ளப்பட்ட ரூ. 293,322.50 ஒப்பிடுதலாகும்.

2.2.4 நிலையான சொத்துக்களுக்கான பட்டியலை தயாரித்தலின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் இதுவரையில் முடிவடைந்துள்ளதோடு அதன் பிரதியானது 2013.11.29 அன்று கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களை பரிசீலனை செய்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட பரிசீலனைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசீலனை குழு அறிக்கையின் பிரதி 2013.07.25 அன்று குறித்த நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு நூலகசாலை புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பாக பரிசீலனை குழுவொன்றும் இதுவரையில் நியமிக்கப்பட்டுள்ளதோடு குறித்த அறிக்கை பெறப்பட்டவுடன் கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பேன்.

ஆ). தேறாதவைப்புகள் தொடர்பாக குறித்த வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டு விளக்கங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அதன்படி நிறுவனத்தின் நிதிக்குழுவின் பரிந்துரையின் மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் நிதி விதிமுறைகள் 188 பிரகாரம் எதிர்காலத்தில் செயல்படுவேன்.

இ). இந்நிறுவனத்தில் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு நியமனங்கள் வழங்கும்போது விரிவுரைகளை நடாத்தி அதற்கான பரீட்சைகளையும் நடாத்தி பெறுபேறுகளை வெளியிட்ட பின்பே கொடுப்பனவுகளுக்கான தகுதியை பெறுவதாக நிபந்தனையொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தாமதக் கட்டணங்களை அறவிடும்போது கவனத்தில் கொள்ளப்படுவது பயணத்தை முடித்த திகதியன்று பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகளை வெளியிடட திகதியாகையால் தாமதக் கட்டண அறவீடு செய்யப்படவில்லை.

ஈ).

i). கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு சிரேஷ்ட முகாமைத்துவ குழுவொன்றை முகாமைத்துவ சபையின் அனுமதியோடு நியமித்து PED/12 சுற்றறிக்கை இல. 7.4.2 பந்தியின் மூலம் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அறிக்கையொன்றை முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.

ii) முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கான முறையான எரிவாறு பயன்பாடு தொடர்பான பரிசீலனை நடைபெறாவிட்டாலும் 2013ம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் வகையில் அனைத்து வாகனங்களுக்காகவும் எரிபொருள் பயன்பாடு தொடர்பான பரீட்சையை

நடைமுறைப்படுத்தி அதன்படி ஓட்ட பதிவுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.6.

அ). பல்கலைக்கழக ஊழியர்களுக்கு மொழித்தேர்ச்சி கொடுப்பனவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 05 /2003 மூலமாக மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நிறுவககிளை மூலமாக அது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் கடிதங்களுக்கு அமைவாக செய்யப்பட்டுள்ளதை தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று UGC/FR/6/3/4/(1) இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைவாக 2003.01.01 இற்கு பின்பு நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அதுபோன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 08/2013 இலக்கமுடைய மற்றும் 2013.05.23 திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாக 2013 மே மாதம் முதல் இக்கொடுப்பனவு வழங்கப்படுவதானது முழுவதுமாக நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ). இந்நிறுவனத்தில் கற்கை சபைகளின் செயலாளர் பதவியில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் நிறுவனத்தில் வருகை விரிவுரையாளராக வழங்கும் சேவைக்கு மேலதிகமாக குறித்த கற்கை சபையில் மாணவர் பதிவு தொடக்கம் பட்டமளிப்பு பரையிலான மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் இணைப்பு செயற்பாடுகள், கற்கை சபைகள் தொடர்பாக விரிவுரையாளர்களை நியிமித்தல், கற்கை சபை கூட்டங்களில் பங்குபற்றல் போன்ற செயற்பாடுகளை கவனத்தில் எடுத்து நிதிச் சபையின் மற்றும் இல் 174/5/6 குறித்த முகாமைத்துவ சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மாதாந்தம் ரூ. 1000 செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக கற்கை சபையின் செயலாளர் கொடுப்பனவானது முகாமைத்துவ சபையால் தீர்மானிக்கப்பட்டு பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டியதால் குறித்த கோரிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதேபோல் கற்கை சபையின் கீழ் நடைபெறும் கற்கை நெறிகள் இணைப்புபடுத்தல் தொடர்பில் வேறு எந்தவொரு கொடுப்பனவும் செய்யப்படவில்லை.

04.

4.1 விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனமானது போராதனைப் பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமாக நடாத்தப்பட்டு வருவதோடு குறித்த நிர்மானம் தொடர்பில் நில உரிமை சுவீகரிப்பு நடைபெறவில்லை எனினும் இது தொடர்பில் பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

4.3. எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்த்து செலுத்துதல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

4.4. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் முடிவுற்ற செயற்றிட்டங்களில் எஞ்சிய தொகைகளை 2012.11.12ம் திகதிய இல.21 ஆவது நிதிக்குழுவின்பரிந்துரையின்

அடிப்படையில் மற்றும் இல.187 ஆவது முகாமைத்துவ சபையின் அனுமதியோடு நிறுவனத்தில் ஆராய்ச்சி நிதியத்திற்கு மாற்றுவதன் மூலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.5. குறித்த இனங்காணும் அடையாள அட்டை முறைமையில் முடிவுற்ற வேலைப்பகுதிகளுக்காக ஆரம்ப முற்பணமாக செலுத்திய தொகை மற்றும் உயர் எல்லை தாமதக் கட்டணங்களை அறவிட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு செயற்றிட்டத்திற்காக இந்நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் அனைத்தும் இதுவரையில் அச்சடிக்கப்பட்டு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு தற்சமயம் இனங்காணும் அடையாள அட்டை துறையின் பயன்பாட்டில் இறுதிக் கட்டத்திலுள்ளது. அதேபோல் குறித்த செயற்றிட்டத்தல் ஒரு பகுதியான கைவிரல் அடையாள இயந்திரம் மூலமாக நிறுவன ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் பதிவசெய்யப்படுகையானது 2013 நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.6.

அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களாக குறிப்பிடப்பட்ட பேராசிரியர்கள் பதவிகள் 03 மற்றும் வருகை பேராசிரியர்கள் பதவிகள் 02 ம் நிரப்பப்படுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள இல. யூஜிசி /எச் /ஆர் /09 /01 /59 மற்றும் 19/03/2008 திகதிய கடிதத்தின் மூலமாக நிறுவன தேவைக்கேற்ப உழைக்கும் வருமானங்களிலிருந்து செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி விவசாய செயற்றிட்ட கற்கை சபையின் தேவைக்கேற்ப குறித்த துறையில் விசேட நிபுணத்துவமுடைய பேராசிரியரொருவர் இல. 200 மற்றும் 2013.05.03 திகதிய முகாமைத்துவ சபையின் மற்றும் இல. 422 மற்றும் 27.07.2013 திகதிய பல்கலைக்கழ பேரவையின் அனுமதியுடன் 2013.07.01 அன்றிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோன்று வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் 3 தொடர்பாக காணப்படும் ஒதுக்கங்களை பயன்படுத்தி வியாபார நிர்வாக கற்கை சபைக்காக ஆய்வாளரொருவரை சேர்த்துக்கொள்வதற்கு முகாமைத்துவ சபையின் பரிந்துரைக்கு அமைவாக பேரவையின் அனுமதியுடன் 2013.06.15 திகதியிலிருந்து ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூ. 15,246,638 தொகையை செலுத்தியிருப்பதானது விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கற்கை சபைகள் 11 இனாலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் பட்டக்கற்கை நெறிகள் 32 இற்கும் தொடர்புடைய 514 பாடங்களுக்கான விரிவுரைகளை நடாத்துவதுடன் தொடர்புடையதாகும்.
அதேபோன்று கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளபடி நிறுவனத்தினால் வருமானமீட்டப்படும் வருமானங்களின் மூலமாக வெற்றிடம் நிரப்புவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கும் கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பும்போது குறித்த ஆண்டினுள் நிரப்புவதற்காக திட்டமிடப்படும் எண்ணிக்கை தொடர்பில் நிதி ஒதுக்க வருடாந்த பாதீட்டு ஆவணம் மூலம் ஒதுக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.

5.1 மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயார் செய்யப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு பிரதிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.2 முன்னர் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்பட வேண்டிய கல்விக் குழுக்கூட்டம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியில் தொழிற்சங்க

நடவடிக்கை காரணமாக கல்வி நடவடிக்கைகளும் வழமையான நிர்வாக நடவடிக்கைகளை முறையாக நடாத்திச் செல்வதற்கு தடை ஏற்படும் என்ற காரணத்தினால் ஆகக் குறைந்த குழுக் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. எனினும் எதிர்காலத்தில் அவ்வாறு நடாத்தப்படாத கூட்டத் தொடர்களையும் மேவுகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.3 விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு புறம்பாக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று காணப்படவில்லை. அத்துடன், தற்போது அந்நடவடிக்கைகளை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் மேவுகை செய்யப்படுகின்றது.

அதன் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2011.12.05 ஆம் திகதிய மற்றும் 52 ஆம் இலக்க கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிறுவன உள்ளகக் கணக்காய்வு திட்டத்திற்காக நிறுவனப் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு மீளாய்வாண்டினுள் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ஒப்பந்த கொடுப்பனவு பட்டியல்களில் இறுதிக் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் முழுவதும் கணக்காய்வு செய்யப்பட்டது.

ii. சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு உரிய பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு முழுமையாக கணக்காய்வு செய்தல் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஏப்ரல் மாதம் வரை வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு அடிப்படையில் பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பட்டோலைகளை முழுமையாக கணக்காய்வு செய்தல்

iii. ஆண்டின் போது நடாத்தப்பட்ட சகல கணக்காய்வு குழுக்களிலும் பங்குபற்றியமை

5.4 கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு குழுவின் விடயப் பரப்பிற்கு கருத்திற் கொள்ளப்படாமல் இருந்ததாக குறிப்பிடப்பட்ட காரணங்களுக்கு இடையே (உ) மூலம் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளக / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பாக மீளாய்வொன்று எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக அவ்வப்போது நடைபெற்ற கணக்காய்வு குழுக்களில் கவனத்தை செலுத்தி அங்கு பரிந்துரைகளை உள்ளடக்கி கணக்காய்வு குழுக் கூட்ட அறிக்கைகள் முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு கெண்டு வரப்பட்டுள்ளது.

அத்தோடு கணக்காய்வு குழுவின் விடயப் பரப்பில் உட்படுத்தப்படாதது என கணக்காய்வு விசாரணை மூலம் சுட்டிக் காட்டப்பட்ட ஏனைய விடயங்கள் எதிர்காலத்தில் நடாத்தப்படும் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கி அப்பரிந்துரைகளை முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

5.5

(அ) மீளாய்வாண்டிற்குரிய வரைவுப் பாதீட்டிற்கு 2012.11.30 ஆம் திகதிய 196 ஆம் இலக்க முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2012.03.30 ஆம் திகதி முகாமைத்துவ சபைக்கு திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டிருந்த இறுதி பாதீடே தொடர்புபடுத்தப்பட்டது.

மீளாய்வாண்டில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியில் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக ஆண்டின் போது செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த அதிகளவிலான செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தது. ஆதலால் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு அறிக்கை வரவு மற்றும் செலவு விடயங்களில் விலகல் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் எதிர்வரும் ஆண்டுகளுக்காக பாதீட்டு அறிக்கை தயரிக்கும் போது விசேட கவனம் செலுத்தப்பட்டு விலகல்களைக் குறைக்கும் வகையில் மிகவும் பொருத்தமான அடிப்படையில் பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தோடர்ந்தும் கவனம் செலுத்துமாறு உரிய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.

உங்கது கணக்காய்வ அறிக்கைகளுக்காக வழங்கப்பட்ட மேற்குறித்த சகல விளக்கங்களும் சரியானதென நான் தனிப்பட்ட ரீதியில் உறுதிப்படுத்துகின்றேன்.

பேராசிரியர் பி.சீ.கே.பீரிஸ்
பணிப்பாளர்,
விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்

பிரதிகள் : செயலாளர் உயர்கல்வி அமைச்சு
செயலாளர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
உபவேந்தர் பேராதனைப் பல்கலைக்கழகம்